பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை07 செவ்வாய்க்கிழமை (20.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:055

பொதுசன நூலகம்

# வன்னி மக்கள் குறித்த பிரசாரங்களை எதிர்கொள்ள தூதுவர்களுக்குப் பணிப்பு

## யுத்த நிலைமையை விளக்குமாறும் ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜனவரி20

வன்னியில் உள்ள தமிழ் மக்ளின் நிலைமை குறித்து வெளிநாடுகளில் செய்யப்படும் பிரசாரங்களை- குற்றச்சாட்டுகளை- எதிர்கொண்டு முறியடித்து - உண்மையான நிலைமையை- சர்வதேசத்துக்கு விளக்கவேண்டும். வன்னியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதன் நோக்கம் குறித்தும் வெளிநாடுகளுக்கு தெளிவு படுத்தவேண்டும்.

இவ்வாறு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்களைச் நேற்று பணித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேரத்தில் மாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், ஜன.20

குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம், வழமையான நேரத்தில் - அதாவது இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை நடைமுறையில் இருக்கும் என்று பலாலி ஊடகப் பிரிவு நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தது.

ஊரடங்கு நேரத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் மக்கள் இதனைக் கருத்தில் கொண்டு தமது நடமாட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## சுதந்திரபுரம், உடையார்கட்டில் ஷெல் வீச்சு இரண்டு பேர் பலி; 10 பேர் படுகாயம்!

கொழும்பு, ஜன.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரம், தேவிபுரம் மற்றும் உடையார்கட்டு பகுதிகளில் படையினர் நேற்று நடத்திய ஷெல் தாக்குதல்களில் 2 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 3 சிறுவர்கள் உட்பட 10 பேர் படுகாயமடைந்துள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு பகுதிகளில் லட்சக்கணக்கான பொது மக்கள் இடம்பெயர்ந்து அடைக்கலமடைந்து மிக நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கைதிகளை நிர்வாணமாக்கி அனுராதபுரம் சிறையில் கொடுமை!

கொழும்பு, ஜன. 20

மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்ட நீதிமன்றங்களினால் விசாரிக்கப்பட்டு அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தாம் சிறைச்சாலையில் காடையர்களினாலும், சிறைச்சாலை அதிகாரிகளாலும் கடந்த சனிக்கிழமை மாலையும், ஞாயிற்றுக்கிழமை காலையும் நிர்வாணமாக்கித் தாக்கப்பட்டனர் என மன்னார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்த மன்னாரைச் சேர்ந்த பல தமிழ்க் கைதிகள் நேற்று (19ஆம் திகதி) மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அப்போது அந்தக் கைதிகளின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட கைதி ஒருவர், தாம் அனுராதபுர சிறைச்சாலையில் நிர்வாணமாக்கப்பட்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-வன்னிக்கான போக்குவரத்து தடைப்பட்டது

கொழும்பு, ஜன.20

வவுனியாவுக்கும் வன்னிக்குமிடையிலான போக்குவரத்துக்கள் நேற்றுத் திங்கட்கிழமையும் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை உலக உணவுத்திட்ட உணவுப்பொதிகள் அடங்கிய 309 லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த லொறிகளில் குறிப்பாக உலக உணவுத்திட்டத்தின் லொறிகள் மறுநாளே வவுனியாவுக்குத் திரும்பி வருவதற்கான

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒருபோதும் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகாது

### கலைஞர் கருணாநிதி விளக்கம்

சென்னை, ஜன.20

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், இந்தியா வின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இலங் கைத் தமிழர்கள் மீது திணிப்பது ஒரு தீர் வாகாது.

-இவ்வாறு தமிழக முதல்வர் மு.கரு ணாநிதி கூறியுள்ளார்.

அவ்வாறு திணிக்காமல் இருப்பதே அமைதி நிலை இலங்கையில் மறுபிறவி எடுப்பதற்கு ஏற்றது என்றும் அவர் குறிப் பிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இந் திய - இலங்கை அமைதி ஒப்பந்தமே திறவு கோல் என்று அண்மையில் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ரோஹித போகொல்லாகம (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-கொழும்பு போக்குவரத்துக்கு இப்போதே ஐந்து பஸ்கள் ஒதுக்கப்பட்டுள்ளன

### கண்ணி வெடிகள் அகற்றப்பட்டதும் சேவை ஆரம்பமாகும்

கொழும்பு, ஜன. 20

ஏ- 9 நெடுஞ்சாலையின் திருத்தப் பணிகள் முடிவுற்றதும், இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான ஐந்து பஸ்கள் யாழ். - கொழும்பு பயணிகள் சேவைக்காகத் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இப் போக்குவரத்துச் சேவைக்காக இப்போதே பஸ்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகபெரும ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ். - கொழும்பு போக்குவரத்துச் சேவையைத் தொடங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் இப்போதே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் யுத்தத்தை நிறுத்தக்கோரி தமிழகத்தில் 10 நாள் தொடர் போராட்டம்

### விரைவில் நடத்துவதற்கு பா.ம.கட்சி முடிவு

சென்னை, ஜன.20

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்காக தமிழகமே செயலிழக்கும் அளவில் 10 நாள்கள் தொடர் போராட்டம் நடைபெறும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் மருத்துவர் இராமதாஸ் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனின் உண்ணாநிலைப் போராட்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் ஒன்றின் பாகங்கள் படையினரால் முல்லையில் மீட்பு

கொழும்பு, ஜன.20

முல்லைத்தீவில் படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் அங்கு சிதைந்த விமானமொன்றின் பாகங்களைக் கண்டுபிடித்துள்ளனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை புலிகளின் விமான ஓடுபாதையொன்றிற்கு அருகில் சிதைந்த விமானத்தின் பாகங்களைப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

குறிப்பிட்ட விமானம் விடுதலைப் புலிகளினுடையதா அல்லது விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானப் படைக்குச் சொந்தமான விமானமா என்பது குறித்து விசாரணைகளை மேற் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## பராக் ஒபாமா இன்று பதவியேற்பு உலகின் பார்வை அமெரிக்கா மீது!

வாஷிங்ரன், ஜன.20

சர்வதேச சமூகத்தினதும் அமெரிக்க மக்களினதும் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பராக் ஒபாமா அமெரிக்காவின் 44ஆவது ஜனாதிபதியாக இன்று பதவியேற்கிறார்.

அமெரிக்க நேரப்படி இன்று காலை 9 மணிக்கு பதவியேற்கவுள்ள அவர் அதனைத் தொடர்ந்து உரை ஆற்றுவார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆப்பிரஹாம் லிங்கனால் 1853ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட 1280 பக்கங்களைக் கொண்ட பைபிளில் கைவைத்து ஒபாமா சத்தியப்பிரமாணம் செய்வார்.

இதேவேளை, அமெரிக்காவில் முதல் வது கறுப்பின ஜனாதிபதி பதவியேற்பதைக் காண்பதற்காக சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வாஷிங்ரனிற்கு வருகை தரவுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரத்தில் இருவர் நள்ளிரவில் எரித்துக்கொலை

அநுராதபுரம், ஜன. 20

அநுராதபுரம், ஜிம்பிரிகஸ்வெவவில் உள்ள உடவலவங்கடவல சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இருவர் எரித்துத் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளி இடம் ஒன்றிலிருந்து 'இன்ரர் கூலர்' வாகனம் (16 ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கு குடா நாட்டின் சகல பகுதிகளிலும் ஊர்காவற்படை

## அமைச்சர் டக்ளஸ் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன.20

சட்டம், ஒழுங்கைப் பேணும் முகமாகவும் ஏனைய சமூகச் சீர்கேடுகள், பாதிப்புக்களை இல்லாதொழிப்பதற்காகவும் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊர்காவற்படை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தப்படையை பொலிஸ் நிலையங்களுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.தேசவள விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகள் உள்ளிட்ட விவசாயிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் கட்டாக்காலி கால்நடைகள் மற்றும் காட்டு விலங்குகளால் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்படுவதாக விவசாய மக்களது பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கட்டாக்காலி கால்நடைகளை அவ்வப் பகுதிகளிலுள்ள கிராம சேவையாளர்கள் மூலம் பிடித்து, உரிமையாளர்களை இனங்கண்டு அவற்றைக் கையளிக்கும் வரையில் கால்நடைப் பண்ணை அமைத்து அவற்றைப் பராமரிப்பதென்றும், உரிமையாளர்கள் இனங்காணப்படாத கால்நடைகளை வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களின் ஜீவனோபாயத்தைக் கருத்தில் கொண்டு சட்ட ரீதியாக அவர்களிடம் வளர்ப்பிற்காக ஒப்படைப்பதென்றும் தான் ஆலோசித்துள்ளதாகத் தெரிவித்தார்.

காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாப்பு பெறுதல் மற்றும் ஏனைய சமூகச் சீர்கேடுகள் மற்றும் பாதிப்புக்களை இல்லாதொழிப்பதற்காக யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் ஆள்களை தெரிவு செய்து அவ்வப்பகுதிக்கு ஊர்காவற்படையை உருவாக்கி அதனை பொலிஸ் நிலையங்களுடன் இணைக்க நடவடிக்கை எடுக்க உள்ள அமைச்சர் மேலும் சொன்னார்.

யாழ். குடாநாட்டில் ஒவ்வொரு பகுதிகளிலும் நிலவி வருகின்ற பல்வேறு சட்ட, ஒழுங்கு மீறல்கள் மற்றும் சீர்கேடுகள் போன்றவற்றை இனங்கண்டு அவ்வப் பகுதி மக்களுடன் இணைந்து இவற்றை இல்லாதொழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு மொழி மற்றும் அவ்வப் பகுதிகளை நன்கு தெரிந்தவர்களை நியமிப்பதன் அவசியம் கருதியே மேற்படி ஊர்காவற் படையை உருவாக்குவதற்கு தான் தீர்மானித்துள்ளதாகவும் இவ்வாறு உருவாக்கப்படும் ஊர்காவற் படையினர் காலக்கிரமத்தில் காவல்துறையில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் அமைச்சர் கூறினார்.

மேற்படி சந்திப்பில் இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள், கிராம சேவையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ-1-95)

# அங்குரார்ப்பண நிகழ்வு

பாலராஜி சமூக வலுவூட்டல் நிறுவனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 249, நாவலர் வீதியில் அதன் இயக்குனர் பா. பிரபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நாதனும் சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன், லயன்ஸ் கழக பிராந்திய குழுத்தலைவர் லயன்.டீ. ஸ்ரீபின் லியோநாட், மாவட்ட இணைப்பாளர் லயன் வி.தியாகராஜா வலயத் தலைவர் லயன் ஐ.ஜீ.சந்திரசேகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ரவீந்திர சர்மா, அகதிகள் புனர்வாழ்வு நிறுவன செயலாளர் ரீ.தியாகராஜா, யாழ். பல்கலைக்கழக முன்னாள் உள்ளக கணக்காய்வாளர் ஆர். ஜெகதீசன், மாவட்டத் தலைவர் லயன் எஸ்.நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-ரி)

# வெளியிணைப்பு இயந்திர மூல தொழிலுக்கு எல்லை நிர்ணயிக்கப்பட்டதாக தெரிவிப்பு

குடாநாட்டில் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளை தொழிலுக்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் செல்லக்கூடாது என்ற நிபந்தனை படையினரால் விதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

கடந்த அரைமாத காலமாக வெளி இணைப்பு இயந்திரத்தில் கடற்தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. நேற்று திங்கட்கிழமை தொடக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளபோதும் குடாநாட்டில் மாதவமுனைப் பகுதிக்கு உட்பட்ட பகுதியிலேயே வெளி இணைப்பு இயந்திரத்தில் செல்லும் வள்ளங்கள் தொழிலில் ஈடுபட முடியும்.

கடல் எல்லையை வரையறுக்க கடலில் கொடிகள் போடப்பட்டுள்ளதாகவும் படையினர் தொழிலாளர்களுக்கு வலியுறுத்தியுள்ளனர். அதற்கப்பால் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-160)


யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
நாதன்ஸ் சினிமா முன்பாக (மேல்மாடியில்)
Spoken English with Grammar
"சிங்களம்"
Short hand, Typing
ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 21.01.2009
வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவில்
எழுத வாசிக்க, கதைக்கக் கற்றுக்கொடுக்கப்படும்.
பாட முடிவில் 'சான்றிதழ்' வழங்கப்படும்
நிர்வாகி:- இ.லோகநாயகி.



## பாராட்டி வாழ்த்துகின்றேன்

க.பொ.த. (உ/த)ப் பரீட்சை 2008 இல் வரலாற்றை ஒரு பாடமாகப் பயின்று விசேட சித்தி (A) பெற்ற கீழ்வரும் மாணவர்கள் 67 பேரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

### பிறைற்றின் கல்வி நிலையம் - சங்கானை

| | | | |
|---|---|---|---|
| 01. சி.ஜெசாளினி | A | 26. சி.கலையரசி | A |
| 02. சி.கோபிகா | A | 27. இ.பிரபாகினி | A |
| 03. மோ.கோமதி | A | 28. ம.பிரபாவதனி | A |
| 04.ச.ஜனனி | A | 29. ப.சர்வசொரூபி | A |
| 05. கை.பிருத்திகா | A | 30. சு.கருணாவதி | A |
| 06. த.சஞ்சிதா | A | 31. பொ.பாமினி | A |
| 07. அ.அன்ரனிசியா | A | 32. சி.யாழினி | A |
| 08. வி.நிறோஜினி | A | 33. ந.சுகந்தினி | A |
| 09. சி.விஜிதா | A | 34. து.யாசினி | A |
| 10. சி.ரதிக்கா | A | 35. தி.பபிர்ரா | A |
| 11. சி.ஜீவிதா | A | 36. வி.தேவகி | A |
| 12. ந.சிவாசினி | A | 37. பொ.ஜெனிற்றா | A |
| 13. ம.சுபீகா | A | 38. ம.ஜனனி | A |
| 14. கு.சபேதினி | A | 39. வே.மனோரஞ்சினி | A |
| 15. சு.தனுஷா | A | 40. மு.அருணா | A |
| 16. த.குகாஜினி | A | 41. செ.அஜந்தினி | A |
| 17. து.நிரோஜினி | A | 42. தெ.கல்பனா | A |
| 18. ப.அபூரன் | A | 43. கை.பிரசன்னா | A |
| 19. யோ.பிரதீபன் | A | 44. ச.டனுராஜன் | A |
| 20. த.விமல் | A | 45. சி.நிதர்சன் | A |
| 21. கி.இளங்குமரன் | A | 46. தி.பிரதீபன் | A |
| 22. ந.ஜெகதீஸ் | A | 47. ஜெ.வைகுந்தன் | A |
| 23. இ.நிசாந்தன் | A | 48. கி.லக்ஸன் | A |
| 24. ச.றமணன் | A | 49. க.நாகேந்திரன் | A |
| 25. மதீஷன் | A | 50. த.தர்ஷன் | A |

### பிரத்தியேக வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 01. உ.பிரிந்தா | A | 02. பொ.வினோதினி | A |
| 03. த.கௌசிகா | A | 04. சு.சோபிதா | A |
| 05. பு.சிவப்பிரியன் | A | | |

### நியூ மற்ஸ் சென்ரர் - கொடிகாமம்

| | | | |
|---|---|---|---|
| 01. அ.சசிரேகா | A | 02. சி.சாமினி | A |
| 03. இ.கேமலா | A | 04. ப.அகிலா | A |
| 05. செ.ரஞ்சினிதேவி | A | 06. வி.தனுஷா | A |
| 07. த.நவநிதி | A | 08. ம.வானதி | A |
| 09. க.வரதாசினி | A | 10. சீ.வினிசிகா | A |
| 11. வ.சுஜீவா | A | 12. வே.லக்ஸி | A |

வரலாறு பாடத்தில் சிறந்த பெறுபேறடைய விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

★ பிறைற்றின் கல்வி நிலையம் - சாவகச்சேரி
★ நியூ மற்ஸ் சென்ரர் - கொடிகாமம்
★ கலை வர்த்தகக் கல்லூரி - வரணி

ஆசிரியர்: S.சுஜீகரன்


# வடக்கின் தாரகை பாடல் போட்டி தொலைக்காட்சியில்

யாழ்ப்பாணம், ஜன.20

'யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு' என்ற தொனிப்பொருளில் கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடத்தப்பட்ட கண்காட்சியில் இடம்பெற்ற வடக்கின் தாரகை சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி நாளை முதல் பிரதி புதன்கிழமைகளில் தெரண தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படவிருக்கிறது.

பலாலி பாதுகாப்புப் படையின் தலைமையகம் மேற்கண்ட தகவலைத் தெரிவிதுள்ளது.

இரவு 9.30 மணி முதல் இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் முதலிடம் பெற்றவருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டிருந்தது. இரண்டாம் இடத்தைப் பெற்றவருக்கு கைஉழவு இயந்திரமும் மூன்றாம் இடத்தைப் பெற்றவருக்கு மோட்டார் சைக்கிலும் பரிசாக வழங்கப்பட்டிருந்தன.

படையினர் முன்னின்று இந்தப் போட்டியை நடத்தியிருந்தனர் என்று தலமையகம் தனது செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்தது.

(அ-1)

# வலி.மேற்கு முன்பள்ளி புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.20

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அதன் சங்க அலுவலக்த்தில் சங்கத் தலைவி ச.சிவரஞ்சினி தலைமையில் இன்று பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணியும் சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(1-ரி)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி திலகவதி கனகநாயகம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி பாரதி சிவன்சேய் அவர்களின் மாமியார் 29.12.2008 அன்று காலமாகியதை இட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா சிவராமலிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவராமலிங்கம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (19.01.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் (19.01.2009) பி.ப 3 மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உடுவில் வீதி, மருதனார்மடம்.
திருமதி.நாகராஜேஸ்வரி பத்மதேவன் (மகள்)
வரூபா (பேத்தி).

## சண்முகம் பாலசுந்தரம் (ஆனந்தம்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் கரணவாய், மூத்த விநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாலசுந்தரம் (ஆனந்தம்) 17.01.2009 சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகம் தம்பதியினரின் அன்பு மகனும் திலகமணியின் அன்புக் கணவரும் அமரர் மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சற்குணம் நிர்மலம் (கனடா), அமரர் நிர்மலன், செல்வன் பா.நிர்மானுஜன் (ஒஷ்ரியா) ஆகியோரின் தையும் பரமானந்தம் கமலாம்பிகை (ஜேர்மனி), ஜெயபாலசிங்கம் விமலாம்பிகை (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் மாணிக்கம் தில்லைநாதன் (சட்டத்தரணி - கொழும்பு) அவர்களின் மைத்துனரும் சண்முகம் கந்தசாமி, சின்னையா சிவஞானம், சின்னத்துரை சிவபாக்கியம், முத்துமாலை வேதாரணியம், கதிர்காமநாதன் தவபூபதி ஆகியோரின் சகோதரனும் துசாந், தொர்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2009 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.
தகவல்: பா.திலகமணி (மனைவி).

## திருமதி சின்னத்தம்பி இலட்சுமி

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இலட்சுமி நேற்று (19.01.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும், ஜெயமாலினி, இரட்ணம்(பொலிஸ் அதிகாரி, வவுனியா), நங்கராசா (தங்கம்ஸன், நெல்லியடி), சிவப்பிரகாசம் (அம்சன் ஒளியகம், நெல்லியடி), மகேசன்(கனடா), மகேந்திரன் (லண்டன்), குகதாசன் (ஜேர்மனி), சிறீதரன் (கனடா), சிவனேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீசன் J.P.(ஓய்வு பெற்ற அதிவிசேடதர லிகிதர்), அருந்ததிதேவி (நிர்வாக உத்தியோகத்தர், கல்வி அலுவலகம், வவுனியா), கௌரீஸ்வரி, கமலாதேவி, வசந்தலக்ஷ்மி (கனடா), ரூபிகாதேவி (லண்டன்), சாந்தி (ஜேர்மனி), ரட்ணதேவி (கனடா), பவானி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஷியா (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), பிரதீபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கார்த்திகா (ஆசிரியை, யா/வேலணை ஐயனார் வித்தியாலயம்), அஜந்தன் (அமெரிக்கா), காயத்திரி அம்சன், அனுராம், ஆரணி, அமிர்தன், உசிதா (ஆசிய பல்கலைக்கழகம், பங்களாதேஷ்), நிரோசன், நிருசா, துசிதன், கவீனா, றதீனா, நதிஜன், துவாரகா, விசாகன், நிசாந்தன், கௌதம், லக்சிகா, சோபிகன், கவீன், விஷ்ணுகன், முரளிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச செயலகம்), துஷ்யந்தன் ஆகியோரின் பேர்த்தியும், அபிஷேகா, மௌனிஷன், வர்னிஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.தங்கராசா (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9233 தொலைநகல்.: 222 9944

## ஒபாமா ஏற்படுத்தப் போகும் மாற்றம்

'மாற்றத்துக்காக' என்ற கோஷத்தோடு தேர்தல் களத்தில் இறங்கி, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றிலேயே புதிய மாற்றங்களை ஏற்படுத்திய பராக் ஹுசைன் ஒபாமா அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக இன்று வாஷிங்ரன் டி.ஸியில் பதவியேற்கின்றார்.

அமெரிக்காவின் முதலாவது கறுப்பு இன ஜனாதிபதி என்ற மாற்றத்தை தேர்தலில் ஏற்படுத்திய ஒபாமா அமெரிக்காவிலும், சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் கொள்கைப் போக்கிலும், அணுகுமுறையிலும் அதிசயிக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவாரா என்பதுதான் இன்று எல்லோரினதும் மனங்களிலும் எழும் கேள்வி.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பதவிக்கு இறுதி வரை தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டன் அம்மையாரையே - வேற்றுமை பாராட்டாமல் - தமது வெளிவிவகார அமைச்சராக நியமித்து அவரையும், அவரது துணைவரான முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டனையும் வளைத்துத் தம் பக்கத்தில் போட்டுக் கொண்டதன் மூலம் 'மாற்றத்துக்கான' ஒபாமாவின் தந்திரோபாயத் திட்டம் கனகச்சிதமாகச் செயற்படத் தொடங்கிவிட்டது என்பது திண்ணம்.

அமெரிக்க ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் ஒபாமா நிர்வாகத்தின் அணுகுமுறை நிச்சயம் மிகுந்த 'மாற்றத்துக்கு உரியதாக' இருக்கும் என்பதும் உறுதி.

இந்த மாற்றம் இலங்கை விவகாரத்தில் - குறிப்பாக இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் - எவ்வாறு அமையப் போகின்றது என்பதே இலங்கையரான நம்மைக் குடையும் பிரதான கேள்வியாகும்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாகவே ஹிலாரி கிளின்டன் அம்மையாரும் ஒபாமாவும் இலங்கை தொடர்பாகத் தெட்டத் தெளிவான கருத்து நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தார்கள் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இதுவரை அமெரிக்காவை எட்டு ஆண்டுகள் நிர்வகித்து வந்த புஷ் நிர்வாகம் சர்வதேச விவகாரம் ஒன்றில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நிலைப்பாடு எடுத்திருந்தது. அது உலகளாவிய ரீதியில் ஆயுதம் தாங்கிய உரிமைப் போராட்டங்கள், விடுதலைப் போராட்டங்கள் அனைத்தையும் ஒரே வகைக்குள் அடக்கி, முழுவதையும் ஒரே கண்ணாடிகொண்டு பார்த்து, சகலவற்றையும் 'பயங்கரவாதமாக' அர்த்தப்படுத்தி, 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேசப் போர்' என்ற வெறித்தனமான கொள்கைப் போக்கைப் பின்பற்றி, பல்வேறு உலகளாவிய குழப்பங்களுக்கு கால்கோள் இட்டது.

ஆனால் ஹிலாரியும், ஒபாமாவும் இப்படி அனைத்தையும் ஒட்டுமொத்தமாக 'பயங்கரவாதப் பிரச்சினையாக' அர்த்தப்படுத்துவதை ஆட்சேபித்தனர். அத்தகைய ஆட்சேபனையைத் தெளிவுபடுத்துவதற்காக இலங்கைப் பிரச்சினையையே உதாரண அம்சமாக அவர்கள் எடுத்து வெளிப்படுத்தி, குறிப்பிட்டுக் காட்டியமையும் கவனிக்கத்தக்கது.

'சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற பெயரில் புஷ் நிர்வாகம் தொடுத்த யுத்தத்தில் அமெரிக்காவின் பிரதான எதிரியாக 'அல் - குவைதா' அமைப்பே உள்ளது. அந்த 'அல் - குவைதா'வையும் புஷ் நிர்வாகத்தினால் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் ஒருங்கு சேர்த்துப் பார்க்க முடியாது என்று ஹிலாரி கிளின்டன் அம்மையார் கூறியிருந்தார்.

ஜனாதிபதி பராக் ஒபாமாவோ இதிலும் விட சற்று மேவிப் போய்க் கருத்துத் தெரிவித்திருந்தார். அந்தக் கருத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தும் தகுதியும், தகைமையும் அவருக்கு இருப்பதும் அங்கீகரிக்கத்தக்கதாகும்.

வெளிப்படையாகவே தோற்றக்கூடிய நிற வேறுபாட்டுடன் - கறுப்பர், வெள்ளையர் என்ற பிரிவுகளுடன் - இருந்த அமெரிக்க சமூகத்திலே அந்த வேறுபாட்டைப் பிளந்து, ஒற்றுமைப்பட்ட அமெரிக்காவின் எழுச்சி மிக்க தலைவராக உருவெடுத்துள்ளவர் ஒபாமா. மிகச் சிறுபான்மையினரான கறுப்பர் ஒருவரை மிகப் பெரும்பான்மையினரான வெள்ளையர்கள் ஒன்றுபட்டுத் தமது ஜனாதிபதியாகவும், உலகின் பிரதான வல்லரசான அமெரிக்காவின் தலைவராகவும் தேர்ந்து ஒரு புதிய உலக 'மாற்றத்தை' ஏற்படுத்தியிருக்கின்றனர். அத்தகைய தலைவரே இலங்கை குறித்து இதே விடயத்தை ஒட்டி முக்கியமான கருத்து ஒன்றை வைத்திருக்கின்றார்.

தங்களுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே முடியாமல் பிளவுபட்டு நிற்கும் சமூகத்துக்கு இலங்கையே முன்னுதாரணம் என்று ஒபாமா குறிப்பிட்டிருக்கின்றார்.

''இலங்கையர்கள் எல்லோரும் வெளித் தோற்றத்தில் ஒரேமாதிரியானவர்களாகக் காணப்பட்டாலும் கூட, அவர்கள் தங்களுக்குள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் சண்டையிட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.'' - என்று குறிப்பிட்டிருந்தார் ஒபாமா. இந்தப் பின்புலத்திலேயே அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி தலைமையிலான நிர்வாகத்தில் இலங்கை பற்றிய அணுகுமுறை அமையப்போகின்றது.

அவர் கூறும் 'மாற்றம்' என்ற கோஷம் அமெரிக்காவுக்குள் மட்டும் அடங்கி விடுவதல்ல. சர்வதேச உறவுகளிலும், போக்குகளிலும், கையாள்கையிலும் கூட அவர் மாற்றத்தை ஏற்படுத்த விழைகின்றார். அவரது மாற்றத்துக்கான அந்த இலக்கு இலங்கையில் ஏற்படுத்தப் போகும் மாற்றம் நிச்சயம் பெரிய வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் அடக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழினத்துக்காகக் குரல் எழுப்ப வேண்டிய பொறுப்புள்ள தரப்புகளும், தொப்புள் கொடி உறவுகளும் அதில் பெரும் தவறிழைக்கும்போது, நலிவுபட்ட தங்களுக்காகக் குரல் எழுப்பும் வேறு தரப்புகளை நோக்கி ஈழத் தமிழர்கள் கரத்தை நீட்டுவதும் கூட ஒரு மாற்றம்தான்.

நலிவுபட்ட மக்களை நோக்கியதாக அமெரிக்காவின் புதிய தலைமையின் புதிய அணுகுமுறை இருக்குமாயின் அந்தப் புதிய உறவுகளை நோக்கியதாக ஈழத் தமிழரின் சிநேகபூர்வ சிந்தனை மாறுவதும் தவிர்க்க முடியாததாகலாம்.

# இயற்கை அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள வீடுகளைத் திருத்தி அமைக்க சிமெந்து இல்லை

## கறுப்புச் சந்தையில் அதிகூடிய விலையில் விற்பனை

யாழ்ப்பாணம்,ஜன.20

குடாநாட்டில் சிமெந்துக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களைத் திருத்தியமைப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

தனியார் வர்த்தகர்களால் அண்மையில் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட சிமெந்து ஒரு பைக்கற்று இரண்டாயிரத்து 200 ரூபா வரையில் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மக்கள் தமது கட்டடப் பணிகளுக்குச் சிமெந்து இன்றி அலைந்து திரியும் இந்த வேளையில் சிமெந்துப் பைக்கற்றுக்கள் இவ்வாறு கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படுவது குறித்து மக்கள் விசனமும், கவலையும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக அண்மையில் குடாநாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம், 'நிஷா' புயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களைப் புனரமைப்பதற்குச் சிமெந்து இன்றித் தவிக்கின்றனர்.

இதேவேளை -

சிமெந்துத் தட்டுப்பாட்டினால் தமது தொழில்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கட்டடத் தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிமெந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (50-224)

# வன்னிப் பகுதியில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் மனிதாபிமானப் பிரச்சினை குறித்து இந்தியா கவலை

## பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கோரிக்கை

புதுடில்லி,ஜன.20

வடபகுதியில்(வன்னியில்) தமிழ் மக்கள் எதிர் நோக்கும் மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து கவலை வெளியிட்டுள்ள இந்தியா, உள்ளக இடம்பெயர்வுகளுக்கு ஆளான மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யு மாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன் தொடரும் மோதல்கள் காரணமாக சிவிலியன்கள் பாதிக்கப்படாதிருப்பது மிகவும் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த வியாழனன்று இரவு இலங்கை வந்ததுடன் இரு நாள்கள் தங்கியிருந்து ஜனாதிபதி உட்பட முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போது இந்தியாவின் மேற்படி கவலையை அவர் வெளியிட்டார்.

அதேவேளை இராணுவ வெற்றிகளைத் தொடர்ந்து இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் தனது விருப்பத்தை ஜனாதிபதி வெளிப்படுத்தியதாகவும் அதற்குப் பதிலளித்த சிவ்சங்கர் மேனன் பேச்சுக்கள் ஊடாக சாத்திய மானளவு விரைவாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருநாள் சந்திப்பு குறித்து இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர்மேனன் கடந்த 16 ஆம், 17ஆம் திகதிகளில் இலங்கையில் தங்கியிருந்து பேச்சு நடத்தினார். அவரது விஜயத்தின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன, பாதுகாப்பின் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

அத்துடன் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்து உரையாடியதுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

### அரசியல் தீர்வுகாண விருப்பம்

இந்தச் சந்திப்பில் இருதரப்பு உறவுகள், பிராந்தியத்தின் தற்போதைய நிலை என்பன ஆராயப்பட்டன. வெளி விவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன தற்போதைய நிலை குறித்து சிவ்சங்கர் மேனனுக்கு எடுத்துக் கூறினார். அதேவேளை ஜனாதிபதி இராணுவ வெற்றிகளைத் தொடர்ந்து, தாம் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல்ரீதியாகத் தீர்வுகாணும் விருப்பத்தை வெளியிட்டார். இந்நிலையில் பேச்சுக்கள் மூலம் சமா தான வழியில் அரசியல் தீர்வுத் திட்டத்தை விரைவாக முன்வைக்க வேண்டியதன் அவசியத்தை சிவ்சங்கர் மேனன் எடுத்துக்கூறினார். அத்துடன் தமிழ் மக்கள் உட்பட இலங்கை வாழ் அனைத்து சமூகமும் அமைதி யாகவும் கௌரவத்துடனும் வாழும் சூழல் ஏற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் மாகாணங்களுக்கு அதி காரப் பரவலாக்கலை மேற்கொள்ளும் அரசாங்கத்தின் கடப்பாட்டையும் வரவேற்றார்.

இந்தச் சந்திப்பின்போது சிவ்சங்கர் மேனன் வன்னியில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து இந்தியா கொண்டுள்ள கவலையை வெளிப்படுத்தியதுடன் உள்ளக இடம்பெயர்வுக்கு ஆளாகியுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியதையும் மோதல்களின்போது சிவிலியன்கள் பாதிக்கப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருந்துவகைகள், முகாம்கள் அமைப்பதற்குத் தேவையான மூலப்பொருள்கள் என்பவற்றை வழங்கி உதவ இந்தியா சித்தமாய் இருப்பதாகவும் அவர் விளக்கினார்.

மேலும் இந்தப் பேச்சுக்களின் போது தற்போதைய உலக பொருளாதார நிலைமை இருதரப்பும் பயனடையும் வகையில் உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தல் என்பவை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# வீதிப் புனரமைப்புப் பணியில் குறைபாடுகள்; அதிகாரிகளுக்கு வேலணை மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம்,ஜன.20

வீதி புனரமைப்புக்கு முருகைக் கற்களைப் பயன்படுத்தித் திருத்த வேலைகள் மேற்கொள்வது அபிவிருத்திப் பணிகளுக்குப் பொருத்தமற்றது.

இப்பணியினால் நயினாதீவு - பிரதான வீதியின் தன்மை மேலும் சீர்கெட்டுவிடும். இதனால் நயினாதீவு மக்களான நாம் மிகவும் கவலை அடைகின்றோம் என்று என நயினாதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 149 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று வேலணைப் பிரதேச செயலர், யாழ். வீதி அபி விருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் மற்றும் கடற்படைப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு பிரதேச மக்களால் அனுப்பப்பட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நயினாதீவில் பல வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாதிருந்த பிரதான வீதி தற்சமயம் திருத்தப்படு கின்றது.

இருப்பினும் தற்போது திருத்தப்படும் முறை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

மக்களின் காணிகளிலுள்ள முருகைக் கற்களைப் பயன்படுத்திப் பிரதேச சபையின் மாட்டு உருளையின் உதவியுடன் சல்லி பரவி தார் ஊற்றப் படுகிறது.

அவ்வாறு ஊற்றப்படும் தாரினை கால் விரலினால் கூட கிளப்பிவிடக் கூடியதாக இருக்கிறது. இதனால் குறுகிய காலத்துக்குள்ளேயே இந்த வீதி மீண்டும் பழுதடைந்துவிடும்.

இதனால் மக்களாகிய நாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம்.

மேலும் இவ்வீதிக்குக் கடற்கரை ஊரி அள்ளிப் போடுவதனால் விரைவில் கடல் ஊருக்குள் நுழையும் அபாயமும் உள்ளது.

எனவே நயினாதீவு மக்களின் சேவையில் அக்கறை கொண்டவர்கள் உரிய முறையில் சீர்செய்ய ஆவண செய்யுமாறு கோருகின்றோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-95)

## நாளை

| | |
|---|---|
| தை 08 | 21.01.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | பி.இ.06.00மணிவரை |
| நட்சத்திரம்: | அனுஷம் |
| | மு.இ. 11.18 வரை |
| சுபநேரம்: | 05.05 - 06.35 |
| இராகுகாலம்: | 12.35 - 02.05 |

## ஒபாமா வெற்றி உலகினைக் காக்குமா?



கறுப்பரை அடிமை ஆக்கி
கட்டி வைத்து அடித்த நாட்டில்
கறுப்பரை விலைபேசி விற்ற
காலமும் இருந்ததன்று
கறுப்பராம் 'ஒபாமா' தன்னை
களங்கமில் தலைவராக ஏற்று
கறுப்பரும் வெள்ளையரும் ஒன்றாய்
களிக்கின்றார் அக மகிழ்ந்து
கறுப்பராம் ஒபாமா பேச்சில்
கக்கிய கனலைக் கண்டோம்
கறுப்பராம் உம் நீதிகாண
காத்திருக்குலகு இன்று
கறுத்த போர் முகில்கள் சூழ
கலங்கிடும் உலகை இந்த
கறுப்பராம் ஒபாமா நாளை
காப்பாரோ பொறுத்திருந்து பார்ப்போம்
கறுப்பதும் வெளுக்குமானால்
கடவுள்தான் என் செய்வாரோ?

-விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜன.20

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினர் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பெண்கள்

* இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம்.
* யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம். (1-86)

* * *

வலி.வடக்கு, ஜன.20

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்கிழமை பி.ப. 4 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி நியூ ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

* * *

வலி.வடக்கு, ஜன.20

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய் கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழகமும் மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

## துயர் பகர்கின்றோம்

### திருமதி பசுபதிநாதன் தனலட்சுமி

எமது பாடசாலையின் விஞ்ஞானகூட உதவியாளராகக் கடமையாற்றிய திரு ப.மகேசன் அவர்களின் பாசமிகு தாயார் 31.12.2008 இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

எமது கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி நந்தினி சிவராஜனின் பாசமிகு மாமனார் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அவர்கள் 03.01.2009 அன்று கனடாவில் காலமாகியதையிட்டு, துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!

பாடசாலை சமூகம்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

# மீசாலை விக்னேஸ்வராவுக்கு உபகரணம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன, 20

யாழ்ப்பாணம் சிலோன் தேவாலயத்தினர் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்களுக்கு விநியோகிக்கவென ஒருலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

இன்று காலை 9மணிக்கு வித்தியாலய அதிபர் கு.கதிர்காமசேகரிடம் உபகரணத் தொகுதிகள் கையளிக்கப்படவுள்ளன.

உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வில் சிலோன் தேவாலய நிறைவேற்று அலுவலர் போதகர் யோகனஸ் டேவிஸ் பிலிப் உதவிப் போதகர் ஜக்ஸன் சூசைப்பிள்ளை, மீசாலைக் கிளைப் போதகர் மகாராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (1-207)

# அறவழி நிலையத்தில் இன்று சேவை நிலையங்கள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன, 20

கைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் கனேடிய உலக பல்கலைக்கழக சேவைகள் நிறுவன அனுசரணையுடன் அமைக்கப்பட்ட தொழிற்பயிற்சி திறன் காட்சியகம், விற்பனையகம், சேவையகம் ஆகியவை இன்று நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

நிலையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர்களான திருமதி சீலா மற்றும் பீற்றர் றிச்சார்ட் ஆகியோர் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வர்.

நிறுவன வட பிராந்திய பிரதிப்பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் விற்பனையகத்தில் முதலாவது விற்பனையை ஆரம்பித்து வைப்பார். (1-207)


**Personal Class**

தரம் 1-12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். நீங்கள் வந்து படிக்க விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P.0771880466


# மரண அறிவித்தல்கள்

## குழந்தை குணசிங்கம்



இல.56/23, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தை குணசிங்கம் நேற்று (19.01.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தை மற்றும் செல்லாச்சி தம்பதியினரின் மூத்த புதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2009)செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.56/23, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம் வடமேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (81970)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னர் கதிரவேலு



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கதிரவேலு 19.01.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் கார்த்திகேசு - தங்கம் தம்பதியினரின் மருமகனும் கமலாம்பிகையின் (இராசு) அன்புக் கணவரும் சுபாஸ்கரன் (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்), மணிமாறன் (லண்டன்), கல்யாணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தினி, குகா (சூட்டி), ஜெயந்தி, ரஞ்சிதராஜ் ஆகியோரின் மாமனாரும் கதிர்சன், சாருஜன், காவியா, நந்தூரி, சுபானந்தன், விஜயன், நிலானா, பிரீத்தி, ஆருதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (21.01.2009) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோட்டைக்காடு,*
*சுன்னாகம்.* (81973)

தகவல்:
குடும்பத்தினர்.


# BOC ஸ்மார்ட் இன்வெஸ்ரர் கணக்கு
# BOC - Smart Investor Account

உங்கள் எதிர்கால முதலீட்டுக்கு உறுதியான அடித்தளத்தினை வழங்கும் தேசத்தின் வங்கியான இலங்கை வங்கியின் புதுமையான சேமிப்புத் திட்டம்

★ அதி உச்ச வட்டி வருமானம்.
★ திட்டமிட்ட மொத்த வைப்பு நிலுவைக்கான உத்தரவாதம்.
★ மாதாந்தம் விருப்பத்தேர்வின் அடிப்படையில் தகுதிக்கேற்ற நிலையான தொகையினை வைப்பிலிட முடியும்.
★ 2 வருடம், 3 வருடம் என வைப்புக் காலத்தினை உங்கள் விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கலாம்.
★ முதிர்வில் நீங்கள் பெறப்போகும் தொகைக்கேற்ப உங்கள் எதிர்காலத்தைத் திட்டமிடலாம்.
★ 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தனியாகவோ, கூட்டாகவோ இக்கணக்கினை ஆரம்பிக்க முடியும்.
★ சிறுவர்களுக்கும் நிபந்தனைகளுடன் ஆரம்பிக்கலாம்.

யாருக்காக?
நிரந்தர மாதாந்த வருமானம் பெறும் சகலருக்கும் புதிர்!

இது சேமிப்புக் கணக்கு வகையுமல்ல
நிரந்தர வைப்புக் கணக்கு வகையுமல்ல

மேலதிக விவரங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைத் தொடர்பு கொள்ளவும்.

*22.01.2009 அன்று அனைத்து இலங்கை வங்கிக் கிளைகளிலும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.*

ந.சிவரட்ணம்
உதவிப் பொது முகாமையாளர்,
வடமாகாணம், இலங்கை வங்கி,
வடமாகாண அலுவலகம், யாழ்ப்பாணம்.


# யாழ்ப்பாணம், மாநகரசபை

சந்தை, பண்ணை மீன் சந்தை, சிற்றுண்டிச் சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2009

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.02.2009 ஆம் திகதி முதல் 31.12.2009 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக) | - ரூ.400.00 |
| கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி | - 27.01.2009, மு.ப. 10 மணிவரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் | - 27.01.2009, நண்பகல் 12 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - 27.01.2009, பி.ப. 2.30 மணிக்கு |

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 27.01.2009 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (15% பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. | நாவாந்துறை சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 371250.00 |
| 02. | பண்ணை மீன்சந்தை, சிற்றுண்டிச்சாலை | 2000.00 | 50000.00 |

குறிப்பு: இவ்விடயம் தொடர்பான 03.11.2008 ஆம் திகதியிடப்பட்ட விளம்பரத்தில் வெளியிடப்பட்ட அனைத்துக் குறிப்புக்களும் இவ்விளம்பரத்திற்கும் பொருந்தும் என்பதுடன் ஆரம்ப கேள்வித் தொகையிலும் பார்க்க குறைந்த கேள்வி சமர்ப்பிப்பவர்களினதும், கேள்வி சமர்ப்பித்து சித்தி பெற்றும் குத்தகை உரிமம் பெற்றுக்கொள்ளாதவர்களினதும் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19.01.2009

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழமைபோன்று மண்எண்ணெய் விநியோகம்

## நேற்று முதல் தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு நேற்று திங்கட்கிழமை முதல் மண்எண்ணெய் பவுசர்கள் மூலம் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித்தார்.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்எண்ணெய் காங்கேசன்துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கப்பலில் இருந்து உடனடியாகவே மண்எண்ணெய் இறக்கப்பட்டு, எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் மூலம் சுமார் 5 லட்சம் லீற்றர் வரையிலான மண்எண்ணெய் வந்து சேர்ந்ததை அடுத்து இதற்கான தட்டுப்பாடும் இன்றிலிருந்து நீங்கிவிடும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-224)

## பங்கீட்டு அட்டைக்கு சீனி விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் பாவனையாளர்களுக்குப் பங்கீட்டு அட்டைக்குச் சீனியை விநியோகிப்பதாகச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

ஒரு கிலோ 74 ரூபா 50 சதம் விலையில் இந்தச் சீனி விநியோகிக்கப்படும்.

ஒரு அங்கத்தவரில் இருந்து மூன்று அங்கத்தவர் வரையானோருக்கு ஒரு கிலோவும், அதற்கு மேற்பட்டோருக்கு ஒன்றரை கிலோ சீனியும் விநியோகிக்கப்படுகின்றது. (50-224)

## கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் யாழ்.வலயக் கிணறுகள் துப்புரவு

வண்ணை,ஜன.20

யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க 'நிஷா' புயல் மற்றும் வெள்ளம் காரணமாக யாழ்.வலயப் பாடசாலைகளில் பாவிக்க முடியாதிருந்த 45 கிணறுகளை கியூடெக், கரித்தாஸ் நிறுவனம் இறைத்துக் குளோரின் போடும் வேலைகளைப் பொறுப்பெடுத்து செய்துவருகின்றது.

அவற்றின் 12 கிணறுகள் துப்புரவு செய்து, குளோறின் இடப்படும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய கிணறுகளும் இறைத்து, குளோறின் போடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வலய மட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட சிறார்களின் அப்பியாசப்புத்தகங்களின் தேவைகளையும் கரித்தாஸ் - கியூடெக்நிறுவனம்பூர்த்தி செய்துவருகின்றன.

இதுவரை 18 பாடசாலைகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கி உள்ளதாகவும் மேலும் பாடசாலைகள் வரிசைக் கிரமத்தில் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (160)

## மறைத்து வைத்த பொருள்கள் மீளப்பெறப்பட்டு விற்பனை

யாழ்ப்பாணம்,ஜன.20

பொதுமக்களுக்குப் பங்கீட்டு அட்டைக்கு என அனுப்பிய உருளைக் கிழங்கு, வெங்காயம் என்பன உரிய முறையில் வழங்கப்படாது மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனை மீளப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலக அதிகாரிகள் அந்தப் பொருள்களை பொது மக்களுக்கு விநியோகித்துள்ளனர்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், மட்டுவில் வடக்கு கிளைச் சங்கமொன்றிற்கு வழங்கப்பட்ட பொருள்களே மறைத்து வைக்கப்பட்டுள்ளது. பின் பொது மக்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து அந்தக் கிளைச் சங்கத்திற்கு விரைந்த தென்மராட்சிப் பிரதேச செயலக அதிகாரிகள் பொருள்களை வாங்கிச் சென்ற பொது மக்களை இடைமறித்துப் பொருள்களை சோதனையிட்டதுடன் அவர்களை மீள சங்கத்திற்கு கூட்டிச்சென்று கிளை முகாமையாளரை விசாரித்தனர். அத்துடன் அங்கு அவதானித்தபோது வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. பின்அந்தப்பொருள்கள் பொதுமக்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டன.(202-131)



இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 162 ஆம் ஆராதனை நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பஞ்சரதக் கீர்த்தனைகள், ஆராதனை, நாதாஞ்சலி ஆகியன அரங்கேறின. இந் நிகழ்வில் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி நரேந்திரா, திருமதி ந.பாக்கியலட்சுமி, மகேந்திரன் ஆகியோர் வழங்கிய இசைக்கச்சேரி யையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:லக்ஸ்மன்)*

## பண்டத்தரிப்பு அம்மன் வீதியை புனரமைப்பதற்கு நிதியுதவி

ஆனைக்கோட்டை,ஜன.20

வலி.தென்.மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு அம்மன் வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு 'யு என் ஓ பி எஸ்' நிறுவனம் நிதியுதவி செய்ய முன்வந்திருப்பதாக மேற்படிப் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

பண்டத்தரிப்புப் பட்டின சபையின் ஆளுகைக்கு உட்பட்ட 1.2 கிலோ மீற்றர் நீளமான மேற்படி வீதி, இவ்வாண்டுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் திருத்தி முடிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (201-20)

## சைவசமய அறிவுப்பரீட்சையும் செயல்முறைப்போட்டியும்

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழகம், பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு கடந்த 55 வருடகாலமாக நடத்திவரும் சைவசமய அறிவுப் பரீட்சை மற்றும் செயல்முறைப் போட்டி ஆகியவற்றை இம்முறையும் நடத்தவுள்ளது.

சைவசமய அறிவுப்பரீட்சை தரம்-1 தொடக்கம் தரம்-13 வரையிலான மாணவர் மட்டத்திலும், கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், ஆகிய செயல்முறைப் போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலரும் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

சைவசமய அறிவுப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளிலும், செயல்முறைப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜனவரி 30 ஆம் திகதியாகும்.

பரீட்சையிலும், போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசில்கள் ஏப்ரல் 10 ஆம் திகதியன்று வழங்கப்படவுள்ளன.

மேற்படி பரீட்சையிலும், போட்டிகளிலும் பங்குபற்றவிரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர்வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஒரு பாடசாலையில் இருந்து சைவசமய அறிவுப் பரீட்சைக்கு 100 பரீட்சார்த்திகள் தோற்றுவார்கள் ஆயின் அப்பாடசாலையை ஒரு பரீட்சை நிலையமாக அமைத்துக்கொள்ளலாம் என்றும், பாடசாலைகள் பரீட்சார்த்திகளின் பெயர்களை பட்டியலிட்டு விண்ணப்பிக்கலாம் என்றும் கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.




## அதிக விலையில் மண்எண்ணெய் வாங்கி நெல்லுக்கு நீரிறைக்கும் விவசாயிகள்

சுழிபுரம்,ஜன.20

சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அதிகவிலையில் மண் எண்ணெய்யை வாங்கி, நெல்லுக்கு நீரிறைக்க வேண்டியிருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவுகின்ற வரட்சியான காலநிலை காரணமாக நெற்பயிர்கள் போதிய நீர் இன்றிக் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காக நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நெற்பயிருக்கு வேண்டிய நீர்ப்பாசனத்தை சுழிபுரம் பகுதி விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் நீரிறைக்கும் இயந்திரங்களுக்குத் தேவையான மண்எண்ணெய்க்குத் தட்டுப்பாடு நிலவியதால், அதிக விலை கொடுத்தே மண்எண்ணெயை வாங்க வேண்டியிருந்ததாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (04-28)

## 'கோப் சிற்றி' யில் கோழி இறைச்சி

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு விமானம் மூலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 'பிறிமா' கோழி இறைச்சிப் பைக்கற்றுக்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இந்தக் கோழி இறைச்சி ஒரு கிலோ பைக்கற் 580 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த இறைச்சிக்கோழிப் பைக்கற்றுக்களை நுகர்வோர் சங்கத்தின் யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள 'கோப்சிற்றி' யிலும் சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத்தொகுதியில் உள்ள 'கோப்சிற்றி'யிலும் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (50-224)

## வலய மட்ட சதுரங்கப் போட்டியில் ஹாட்லி இரு பிரிவுகளில் சம்பியன்

கரவெட்டி, ஜன.20

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான 2009 ஆம் ஆண்டுக்கான சதுரங்கப் போட்டிகளில் இரு பிரிவுகளில் ஹாட்லிக்கல்லூரி சம்பியனானது.

கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெற்ற போட்டியில் இருபிரிவுகளில் ஹாட்லிக்கல்லூரி சம்பியனானது.

இந்தப் போட்டிகளில் 17 பாடசாலைகள் பங்குபற்றின.

15 வயது மாணவர்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைக் ஹாட்லிக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

19 வயது மாணவர்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை ஹாட்லிக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தைக் கரணவாய் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

வெற்றி பெற்ற பாடசாலைகளில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மாவட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. (50-[illegible])

## இரத்த வங்கிக்குப் பொதுமக்களிடமிருந்து போதுமான அளவு இரத்தம் கிடைப்பதில்லை

ஆனைக்கோட்டை, ஜன.20

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் இரத்தத்தின் அளவு தற்போதைய நிலையில் போதுமானதாக இருப்பதில்லை என இரத்த வங்கி வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரத்ததான நிகழ்வில், யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியவர்களுக்குத் தமது பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்த போது மேற்படி கருத்தையும் வெளிப்படுத்தினர். இதன்போது இரத்த வங்கி அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

நிறுவனங்கள் காணப்பட்டாலும் மிகச் சொற்ப அளவிலேயே இரத்ததான நடமாடும் சேவை[illegible] நிறுவனங்கள் முன்வருகின்றன. எனினும் அந்த நிறுவனங்கள் கூட வருடத்தில் தொடர்ச்சியாக நடமாடும் சேவையை செயற்படுத்துவதில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியைப் பொறுத்தமட்டில் குடாநாட்டில் எந்தவோர் இடத்திலும் நடமாடும் இரத்த முகாமை நடத்தத் தயாராக இருக்கின்றது. எந்தவொரு பொது நிறுவனமும் இரத்த முகாம் ஒழுங்கு செய்ய [illegible] தொடர்பு கொள்ள [illegible] அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார். (201-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியர்கள் வாழ்வுச் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.பிரதேச செயலகத்தினூடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கு டிசெம்பர் மாதம் ஓய்வூதிய வவுச்சருடன் அனுப்பி வைக்கப்பட்ட உயிர் வாழ்வு சான்றிதழை இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் அதனைத் தமது பிரிவு கிராமசேவையாள ரூடாக உறுதிப்படுத்தி இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201)


**காணி விற்பனைக்கு**

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 4 பக்கச் சுவர், பெரியகேற், குழாய்க்கிணறு என்பவற்றுடன் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தரகர் தேவை இல்லை

இல.60, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.021 222 3898, 0776917030

**இந்து கிறிஸ்தவ திருமண சேவைகள்**

உரிய வயதுகளில் அல்லாமல் திருமணங்கள் தொடர்ந்தும் பின்நகர்ந்து செல்வதனை, தொடர்ந்தும் அனுமதிக்கப் போகின்றோமா? 2009 - தை, பங்குனி, வைகாசியில் திருமணங்களை எதிர்பார்ப்பவர்கள் நேரில் விவரங்களுடன் சந்திக்கலாம். தரகர்கள் மூலம் அனுப்பும் ஜாதகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தரமான, துரிதமான திருமணங்களுக்கு ஒத்துழைப்போம்! அருள் முருகன் திருமணப் பணியகம், 03, யாழ்வீதி, சிறாம்பியடி லேன், (ஆரியகுளம் வாசிகசாலை அருகிலான லேன்), யாழ்ப்பாணம்.


## நீர்வேலிப் பகுதியில் திருட்டு முயற்சி முறியடிப்பு

இரவு வேளையில் வீட்டின் ஓட்டைப் பிரித்து கொள்ளையிட முயன்ற திருடர்கள் வீட்டு உரிமையாளரின் சாதுரியமான செயற்பாட்டால் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இச்சம்பவம் நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினமன்று வீட்டிலுள்ளவர்கள் உறக்கத்திலிருக்கும் போது வீட்டின் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கித் திருடுவதற்குத் திருட்டுக் கோஷ்டியொன்று முயற்சித்தது. அதன் போது சத்தம்கேட்டு விழித்தெழுந்த வீட் டின் உரிமையாளர் உதவி கேட்டுக் கூக்குரலிட்டார். எனினும் அயலவர்கள் எவரும் உதவிக்குச்செல்லவில்லை.

இதனால் உடனடியாக அவர் தொலைபேசி மூலம் திருட்டு முயற்சி தொடர்பாக தமது உறவினர்களுக்கு அறிவித்து உதவிகோரினார். இதனால் திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலிகள்

மண்ணில் 17 ★ 06 ★ 1907



விண்ணில் 21 ★ 12 ★ 2008

**அமரர் சரவணை பூரணம்**

திதி: தசமி (20.01.2009)

அன்பின் வடிவமாய்
அன்புச் செல்வங்கள் பல பெற்று
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்
பிள்ளைகள் பல கண்டு
நூற்று இரண்டு வருடங்கள்
இம் மாநிலத்தில் வாழ்ந்த
எம் குல தெய்வம் என்றுமே
எம் நினைவுகளில் வாழ்கின்றீர்கள்

அல்லாரை தெற்கு,
மீசாலை.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

(81891)

## நீங்கா நினைவுகளில் ஓராண்டு

எழுகதிராய் 14 * 02 * 1953



விழுகதிராய் 01 * 02 * 2008

**அமரர் கிறிஸ்தோப்பர் கொலின் தேவராஜா**

(வருமானவரி மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேசசபை)

திதி: அபரபக்க தசமி (20.01.2009)

ஆறுதல் சொல்லயார் இருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா
தேறுதல் சொல்லத் தெய்வமே வந்தாலும் - உங்கள்
திருமுகம் ஒருதரம் காண்பதற்கு ஈடாகுமா
நீங்காது உங்கள் நினைவுகள்
நிலையாக எம்மனத்தில் வாழ்கின்றன

ஆத்மா சாந்திபெற அனுதினமும்
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

"திருப்பதி",
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

(81923)

## நினைவலைகள்

31ஆம் நாள் 36ஆம் நாள்



மண்ணில் 04.03.1922 — விண்ணில் 21.12.2008

மண்ணில் 08.07.1950 — விண்ணில் 16.12.2008

**திருமதி சின்னையா சேது** — **அமரர் சின்னையா மெய்யழகன் (நடேஸ்)**

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் அகலாது.

கடந்த 16.12.2008, 21.12.2008 அன்று இறைபதம் எய்திய எமது இதயதீபம் சின்னையா மெய்யழகன், தாயார் சின்னையா சேது அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (20.01.2009) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் தாயார் சேது அவர்களின் இல்லத்தில் இருவருடைய கிரியைகளும் நடைபெறும். இக்கிரியைகளிலும், அன்னார்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவாலயம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. — குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளுடன்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 25 ✱ 08 ✱ 1964



விண்ணில் 21 ✱ 12 ✱ 2008

**அமரர் வின்சன் இஸ்ராயேல் மோகன்ராஜ் (யேர்மன்)**

''இயேசுவே, நீர் ஆட்சியுரிமை
பெற்று வரும்போது
என்னை நினைவிற் கொள்ளும்.

''நீர் இன்றே என்னோடு பேரின்ப
வீட்டில் இருப்பீர் என உறுதியாக
உமக்குச் சொல்கிறேன்.''

*(லூக் 23:42-43)*

கடந்த 21.12.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் சகோதரன் றாஜனின் துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி எமக்கு ஆறுதல் கூறிச் செபித்த எம் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொடர்பு கொண்ட உறவினர்கள், றாஜனின் நண்பர்கள் மற்றும் யாழ்/திருமுழுக்கு அருளப்பர் ஆலயம் (சஞ்சுவான் கோயில்) பங்குத்தந்தை, பங்கு மக்கள், டி.மசனட் இறையியல் குழுமத்தினர், இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட அருட்சகோதரிகளுக்கும், வழிபாட்டு நிகழ்வை மேற்கொண்ட யாழ்/ புனித வின்சன் 'டீ'போல் மத்தியசபை செயற்குழுவினர்க்கும் எமது இதய நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

''இறைவன் என்றென்றும் போற்றப் பெறுவாராக''

தகவல்:
தாய்:திருமதி தங்கமணி வின்சன் இஸ்ராயேல்,
சகோதரர்: வி.அன்ரன் டேவிட் (நோர்வே),
சகோதரிகள் : மலர் மரியதாசன், றஞ்சி இயேசுதாசன்,
டெய்சி தவராஜா, [illegible]

36/3, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(81949)

## முதலாம் ஆண்டு இதய அஞ்சலி



**செல்வி விஜிதா சிவராசா (சுகி)**

மலர்வு:09✱02✱1980 — உதிர்வு:01.02.2008

திதி : தசமி (20.01.2009)

கோடி அம்புகள் கொண்டு
இதயத்தைத் துளைத்தது போல்
கொடூரமானதல்லவா உன் பிரிவு
சாவுகள் தவிர்க்க முடியாததைதான் - ஆனால் உன்
சாவு சகிக்க முடியாதது.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

என்றும் உன் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை அலகின் நவீன உபகரண வசதியுடனான பிரிவின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்தத் திறப்பு விழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் தலைவர் லயன் மகேந்திர அமரசூரிய, சிறப்பு விருந்தினரான லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் 306 'BI' லயன் நிமால் ராஜபக்ஷ, ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளால் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், புதிய சிகிச்சைப் பிரிவை லயன் மகேந்திரஅமர சூரிய நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டா வது படத்திலும் காணலாம்.

பிரதம விருந்தினரான லயன் மகேந்திர அமரசூரிய, சிறப்பு விருந்தினரான லயன் நிமால் ராஜபக்ஷ, யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ரி.தேவநேசன், வைத்திய கலாநிதி எஸ்.சிவன்சுதன், செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ராக்வன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள நான்கு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்:லக்ஸ்மன்)*

## சம்பளக் கொடுப்பனவு

தற்காலிக இணைப்புப்பெற்று தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு இம்மாதத்திற்கான சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை ஆசிரியர்களது சம்பளத்தொகையினை உரியவர்களது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதால் அதற்கு முன்னர் ஆசிரியர்கள் வலயத்திற்கு வருகை தந்து சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுமாறு தீவகக் கல்வி வலயக் கணக்காளர் எஸ்.பரதன் கோரியுள்ளார். (04-127)

# அரச உணவுக் களஞ்சியத்தில் பால்மா போதியளவில் கையிருப்பில் உள்ளது

## செயலகத்திட்டப் பணிப்பாளர் தகவல்

யாழ்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பால்மா வகைகள் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் போதியளவு கையிருப்பில் இருப்பதாக யாழ். மாவட்டச் செயலகப் புனர்வாழ்வுப் பகுதியின் திடடப் பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

400 கிராம் அங்கர் பால்மா 24 ஆயிரத்து 436 பைக்கற்றுக்களும், லக்ஸ்பிறே பால்மா ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 140 பைக்கற்றுக்களும் களஞ்சியத்தில் கையிருப்பில் உள்ளன.

இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் வழங்கல் கட்டளைகளைப் பெற்று, களஞ்சியத்தில் பால்மாக்களை உடனடியாகப் பெற்று அங்கர் பால்மா பைக்கற் ஒன்று 280 ரூபாவுக்கும், லக்ஸ்பிறே பைக்கற் ஒன்று 252 ரூபாவுக்கும் விற்பனை செய்யுமாறு திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாவற்குழி அரச களஞ்சியத்தில் சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா, பருப்பு என்ப னவும் கையிருப்பில் இருப்பதால் ப.நோ.கூ. சங்கங்கள் அவற்றிற்குரிய வழங்கல் கட்டளைகளைப் பெற்று விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்க ளிலும் பால்மா வகைகள் போதியளவில் கையிருப்பில் உள்ளதாகவும், பாவனை யாளர்கள் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதாகவும் தனியார் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பால்மாவை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரும் முகவர்களும் சில்லறை வர்த்தகர்களுக்குப் போதியளவு வழங்கி வருவதாகவும் முகவர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

## நீர் இறைக்கச் சென்றவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கச் சென்ற விவசாயி பாதையில் உள்ள கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பி.கணேஸ்வரன்(வயது 45) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

இவருடன் இவரது மகனும் கூடவே சென்றிருந்தார். எனினும் சம்பவ இடத்திற்கு அண்மையில் மக்கள் குடியிருப்புக்கள் இன் மையால் அவரது மகன் வீட்டிற்கு ஓடிச் சென்று உதவிக்கு ஆள்களை அழைத்துச் செல்வதற்கிடையில் கிணற்றில் விழுந்த நபர் மரணமாகி விட்டதாகத் தெரிவிக்கப்டுகின்றது. (50-207)

## அங்கர் பால்மா போதியளவு தனியாரிடமும் உள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்ப்பாணத்தில் மக்களுக்குத் தேவையான அங்கர் பால்மா போதியளவு கையிருப்பில் உள்ளதாக அதன் யாழ்ப்பாண முகவரான எஸ்.வி.முருகேசு வர்த்தக நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நுகர்வோரின் பாவனைக்குத் தேவையான பால்மா தம்மிடம் கையிருப்பில் உள்ள தாகவும் தேவைக்கேற்றவாறு பால்மாவை ஏனைய வர்த்தக நிறுவனங்களுக்கு விநி யோகிக்கும் நடவடிக்கை தொடர்ந்து நடை பெறுவதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் அங்கர் பால்மாவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்துக்குத் தேவையான மற்றொரு தொகுதி பால்மா எதிர்வரும் வெள்ளிக்கிமை கப்பல்மூலம் வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கையில் பேசிய போர் நிறுத்த விடயங்கள் குறித்து தமிழகத்துக்கு எதுவுமே கூறாமல் டில்லி நழுவிய மேனன்

இலங்கையிலிருந்து சென்னை திரும்பிய இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன், போர்நிறுத்தம் தொடர்பாக இலங்கையில் பேசிய விடயங்கள் குறித்து தமிழகத்துக்கு எதுவுமே கூறாமல் விமான நிலைய உட்பாதையூடாக டில் லிக்கு பயணமாகிவிட்டார்.

இதனால், விமான நிலையப் பயணிகள் வருகைப் பகுதியில் இவரது வருகையை எதிர்பார்த்துக் கரத்திருந்த செய்தியாளர்களும் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்த தகவல்கள் வருமாறு -

இலங்கையில் நடைபெறும் போரைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி உட்பட அனைத்து கட்சியினரும் குரல் எழுப்பி வருகின்றனர். இதையடுத்து பேச்சு நடத்துவதற்காக பிரதமர் மன்மோகன்சிங், இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சிவசங்கர் மேனனை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

அவர், கடந்த 15ஆம் திகதி இரவு டில்லியிருந்து நேரடியாகக் கொழும்பு புறப்பட்டுச் சென்றார். அங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசியல் ஆலோசகர், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ரோஹித்த போகொல் லாகம, உயரதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

பின்பு, சிவ்சங்கர் மேனன் கொழும்பில் இருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமா னம் மூலம் நேற்று முன்தினம் காலை 8.55 மணிக்கு சென்னை சென்றடைந்தார்.

இவரது வருகையை அறிந்து, பேட்டி எடுப்பதற்காக செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சிக் குழுவினர் சென்னை பன்னாட்டு விமான நிலைய பயணிகள் வருகை பகுதியில் தயார் நிலை யில் காத்திருந்தனர்.

அவர், நேற்று முன்தினம் காலை 10.10 மணிக்கு இந்தியன் எயார்லைன்ஸ் விமானத்தில் டில்லி செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. எனவே இவரை பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து உள்நாட்டு விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்வதற்கான கார் மற்றும் 8 பாதுகாப்பு வாகனங்கள் தயார் நிலையில் இருந்தன.

ஆனால், செய்தியாளர்களைச் சந்திப்பதைத் தவிர்க்க விரும்பிய சிவ்சங்கர் மேனன், அங்கிருந்து இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்துக்கு உள் வழியாகச் செல்லஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார். உடனே, டில்லியில் உள்ள விமான நிலைய ஆணையத்தில் அதற்கான சிறப்பு அனும தியை அதிகாரிகள் பெற்றனர்.

இதைத்தொடர்ந்து அவர், உள் வழியாகவே காரில் சென்னை உள்நாட்டு விமான நிலையத்துக்கு அழைத்துச் செல் லப்பட்டார். பின்னர் அங்கிருந்து காலை 10.10 மணிக்கு டில்லி புறப்பட்டுச்சென்றார்.

எனவே, இவரது வருகையை அறிந்து, பேட்டி எடுப்பதற்காக வெகுநேரமாகக் காத்திருந்த செய்தியாளர்கள், தொலைக் காட் சிக் குழுவினர் ஆகியோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதேவேளை, தமிழக முதல்வர் கருணாநிதி போர் நிறுத்தம் தொடர்பாக இலங்கையில் பேசிய விடயங்கள் குறித்து சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு சென்னை வந்திருந்த சிவ்சங்கர் மேனனுக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்றும் -

ஆனால் சிவ்சங்கரோ கருணாநிதியைச் சந்திக்காமல் அவரது அழைப்பை உதாசீனப்படுத்தும் வகையில் டில்லி சென்று விட்டார் என்றும் தமிழகத் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 120 மில்லியன் பெறுமதி
# இதற்கு மேல் சொல்லவும்




இலங்கையின் மகத்தான சேமிப்புச் சீட்டிழுப்பு மேலும் விரிவடைந்துள்ளது. பத்தும் விமன 2009 சீட்டிழுப்புக்களி

- ஒவ்வொரு வாரமும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு ரூ.1 மில்லியன் வாராந்தச் சீட்டிழுப்பில்
- ரூ.30 மில்லியன் பெறுமதியான மேர்சிடீஸ் பென்ஸ் E-Class கார் வருட இறுதி பிரீமியம் சீட்டிழுப்பில்
- ரூ.10 மில்லியன் பெறுமதியான ஆடம்பர இல்லம் வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில்
- ஒவ்வொன்றும் ரூ.1.6 மில்லியன் பெறுமதியான 8 அல்டோ கார்கள் பிராந்திய ரீதியான ஊருக்கு ஊர் சீட்டிழு

அதிகமாகச் சேமித்தால் வெற்றி வாய்ப்புக்களும் அதிகமாகும். HNB பத்தும் விமன 2009 - இலங்கையின் மாபெரும் சேமிப்புச்

விபரங்களுக்கு அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்துடன் தொடர்புகொள்ளுங்கள் அல்லது HNB தலைமை அலுவலகம் HNB டவர்ஸ், 479,
தொலைபேசி: 2661971-5, 2664664 பெக்ஸ்: 2662832 ஈ-மெயில்: mktdiv@hnb.lk வெப்தளம்: www.hnb.net

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியான பரிசுகள்!

வும் வேண்டுமா?

HNB PATHUM VIMANA 2009

உங்கள் வாழ்க்கைக்கு புதிய மாற்றம்




ழுப்புக்களில் ரூ.120 மில்லியன் பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.

- ன்
கள்
ஊர் சீட்டிழுப்பில்
- வாராந்தம் ரூ.5,000 முதல் ரூ.100,000 வரை 40 பேருக்கு பணப் பரிசுகள் TV Game Show போட்டியில்
- ஒவ்வொரு வேலைநாளிலும் ரூ.20,000 பணப் பரிசு நாளாந்தச் சீட்டிழுப்பில்

சேமிப்புச் சீட்டிழுப்பில் இன்றே இணைந்து பரிசுகளை வெல்லுங்கள்.

ர்ஸ், 479, ரி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10.

HATTON NATIONAL BANK HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இல்லற வாழ்வின் 20 ஆண்டுகள் நிறைவு

18.01.2009



திரு.திருமதி பஞ்சலிங்கம் பங்கையமலர் (81954)

தம்பதியர்

கடந்த 18.01.2009 அன்று திருமணவாழ்வில் 20 ஆண்டுகளைப் பூர்த்திசெய்த பஞ்சலிங்கம் பங்கையமலர் தம்பதியர் நீண்டகாலம் சீரும் சிறப்புடனும் நலமாக வாழ எங்கள் இதய பூர்வமான வாழ்த்துக்கள்

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

வாழ்த்துவோர்: மருமக்கள்
யசோதரா, விஜிதா, நிஷாஜா,
விமுசினி, விஜியதீபன், பகுதீபன்,
ரவிவர்மா, பிரதாபன்.

## பிரதேச சபைக் கட்டடம் புனரமைக்கப்படுகிறது

வழக்கம்பரையில் உள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச சபை தலைமை அலுவலகக் கட்டடத்தை புனரமைத்துஅழகுபடுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அலுவலக மேல்மாடிக் கட்டடச் சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்படுகின்றது. நீண்டகாலத்துக்குப் பின்னர் பிரதேசசபைக் கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் சபையின் செயலாளரினால் முன்னெடுக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-28)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆரம்பப் பிரிவு உதவி அதிபர்
செல்வி தனலட்சுமி இராமலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தை
**அமரர் முத்தையா இராமலிங்கம்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(81959)

## மரண அறிவித்தல்

### திருமதி கலாசோதி இதயகுமார் (ஆசிரியை)

(யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, மகாவத்தை அ.த.க.பாடசாலை நாரகேன்பிட்டிய)



நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல.18 - 4/1 கொலிங்வூட் பிளேஸ் வெள்ளவத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாசோதி இதயகுமார் நேற்று (19.01.2009) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஐயாத்துரை இதயகுமார் அவர்களின் அன்பு மனைவியும் மிதுலா, நிருத்திகா, வேணிலா ஆகியோரின் அருமைத்தாயும் நேசரூபனின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை திருமதி சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரஞ்சோதி, ஞானசோதி, சிவசோதி, ஜெகசோதி, அருட்சோதி, ஈஸ்வரசோதி, செந்தில்சோதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் சாந்தகுமார், பிறேமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2009) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு கல்கிஸ்ஸ மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று மாலை 5 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஐ.இதயகுமார்**
(நம்பியார் - கணவர்)
(சி/556827)

## கந்தபுராண படனம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.20

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் விநாயகர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கந்தபுராண படனம் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று மாதங்கள் புராண படனம் இடம்பெறவுள்ளது. (201)

## சபரிமலைப் பிரசாதம் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.20

கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பன் ஆலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சபரிமலை சென்று வந்த சுவாமிமார் கொண்டு வந்த விபூதி, அளவணைப் பாயசம் ஆகிய பிரசாதங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (201)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அத்த நட்சத்திரம், 3 ஆம் பாதத்தில், 21.03.1981ல் பிறந்த பிர தேச செயலகத்தில் லிகிதராகக் கடமை புரியும் மண மகனுக்குப் படித்த, அழகான, வயது குறைந்த மணப் பெண் தேவை. குறிப்பு, குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:- 5171
மே/பா உதயன்.
(81953)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை நடை பெறவுள்ளது.

ஈராண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம்- 2007/2009), பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழு நேரம் - 2007/2008) கற்கை நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சையே நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியுள்ளவர்களுக் கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. விண்ணப்பதாரிக ளின் பெயர்ப்பட்டியலை யாழ்.பல்கலைக் கழக உதவிப் பதிவாளர் அனுமதிகள் கிளை விளம் பரப் பலகையில் பார்வையிடலாம் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (201)

## மரக்கறி வகைகளின் சந்தை விலைகள் (நேற்றையவை)

குடாநாட்டின் பிரதான சந்தைகள்

| மரக்கறி வகைகள் 1-கி.கிராம் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 150 | 120 |
| ப.மிளகாய் | 550 | 300 | 400 | 500 |
| தக்காளி | 680 | 600 | 400 | 250 |
| அவரை | 100 | 30 | 80 | 80 |
| மரவள்ளி | 90 | 80 | 70 | 80 |
| கோவா | 180 | 130 | 160 | 40 |
| கரட் | 190 | 100 | 150 | 160 |
| பூசணி | 110 | 70 | 80 | 100 |
| புடலங்காய் | 70 | 50 | 40 | 80 |
| வாழைக்காய் | 160 | 140 | 160 | 140 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | - |
| சின்ன வெங்காயம் | 150 | 80 | 150 | 140 |
| பெரிய வெங்காயம் | 200 | 120 | 180 | - |
| பாகற்காய் | 175 | 140 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 40 | 50 | 30 |
| பயிற்றங்காய் | 150 | 140 | 130 | 140 |
| லீட்ஸ் | 200 | 180 | 200 | 200 |
| தேங்காய் | 30-50 | 25-50 | 25-30 | 20-30 |

(உதவி: HNB ASSURANCE)

## உளவள ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல்

வேலணை,ஜன.20

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஐந்து வலயங்களையும் சேர்ந்த உளவள ஆலோசகர்கள், முதன்மை சீர்மிய ஆசிரியர்கள், உதவி உளவளபயிற்றுநர், சிரேஷ்ட உளவள பயிற்றுநர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண உளவள முகாமையாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (201-26)


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

### மலிவு விலையில்... கோழி இறைச்சி விற்பனை



பிறிமா நிறுவனத்தினால் சுத்தமான முறையில் பொதி செய்யப்பட்ட பிறிமா கோழி இறைச்சிப் பொதிகள் (PRIMA WHOLE CHICKEN) மீண்டும் எமது சங்க கூட்டுறவு நகர் விசேட விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

**1 Kg பிறிமா கோழி இறைச்சியின் சில்லறை விலை ரூபா 580/- மட்டுமே**

குறிப்பு:
இவ் இறைச்சிப் பொதிகள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் உடனுக்குடன் தருவிக்கப்பட்டு மிகைக் குளிரூட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் தொகைக்கேற்ப விசேட கழிவு வழங்கப்படும்.

தேவையானவர்கள் எம்முடன் அல்லது யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்.**
(சி/556826)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் மற்றொரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## கணேசன் பிரமிலா

**பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**



இத்தகைய சிறப்பான் பெறுபேற்றை நான் அடைந்து கொள்வதற்கு எனது பெற்றோர் வழங்கிய பூரண ஒத்துழைப்பு அளப்பரியது. அத்தோடு உயர் பெறுபேற்றை நான் பெறவேண்டும் என்பதற்காக என்னிலும் பார்க்க பல மடங்கு அவாவுடன் அடிக்கடி என் படிப்பின் வேகத்தை அதிகரிக்கும் வகையில் அன்பையும் ஆலோசனைகளையும் பாடசாலை தொட்டு தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் வரை வழங்கி வந்தனர். அதிலும் என் உயர் பெறுபேற்றுக்கு வரலாற்று ஆசிரியர் V.V.விஜயரூபன் அளப்பரிய உதவிகளை வழங்கினார். மேலும் எனது ஆசிரியர்களின் கண்டிப்புடன் கூடிய சீரிய நெறிப்படுத்தலும் அடிக்கடி அவர்கள் வழங்கிய பல்வேறு அறிவுரைகளுமே எனது இப்பெறுபேற்றுக்குக் காரணம் ஆகும்.

பாடசாலை தொட்டு தனியார் கல்வி நிறுவனங்கள் வரை எனது ஒழுங்கை இயன்றவரை சீராகப் பின்பற்றியதுடன் பரீட்சைகள் எதனையும் நான் உயர்தரக் கல்விக் காலப்பரப்பில் உதாசீனம் செய்யாது மிகுந்த ஆர்வத்துடன் எதிர்கொண்டேன். அது மட்டுமின்றி அரட்டை அடிக்கும் நண்பர்களை இயன்றளவில் தவிர்த்துக்கொண்டேன். அதிகாலையில் தினமும் அதிகநேரம் எனது பாடங்களைத் தயார் செய்வதில் நேரத்தைச் செலவிட்டேன். மூன்று பாடங்களிற்கும் சமமான முக்கியத்துவத்தைக் கொடுத்து அவற்றை மிகுந்த ஆர்வத்துடன் கற்று வந்தேன். அது மாத்திரமின்றி எனக்கு முன்னர் உயர் பெறுபேறுகளை பெற்றவர்களையும், பல்கலைக்கழகம் சென்றவர்களையும் இலக்காகக் கொண்டு கற்றலை மேற்கொண்டு வந்ததுடன் எனது சக நண்பர்கள், நண்பிகள் உயர் புள்ளிகளைப் பெறுபவர்களை மையப்படுத்திய வகையில் எனது கற்றலின் வேகத்தை அதிகரித்தேன்.

உயர்தரத்திற்கு புகுந்த சிறிது காலத்திற்குள்ளேயே உயர்தர இறுதிப் பரீட்சையில் உயர் பெறுபேற்றைப் பெறவேண்டும் என்பதையே எப்போதும் என் மனதில் ஆழமாக வரவழைத்துக் கொண்டேன். பரீட்சைக்கு ஆயத்தப்படுத்திய வினாக்களில் 77% மேற்பட்டவற்றை பரீட்சை மண்டபத்தில் வழங்கப்பட்ட வினாத்தாள்களில் சந்தித்தமை மனதிற்குத் தெம்பை ஊட்டியதுடன் 3'ஏ' பெறுபேற்றை பெறுவேன் என்பதையும் உறுதி செய்தன. மேலும் எதிர்பார்ப்பின் நோக்கில் ஆசிரியர்கள் வழங்கிய பெருமளவு வினாக்கள் பரீட்சைக்கு வந்தமை எனது 3'ஏ' சித்திக்கு வாய்ப்பானது.

எதிர்காலத்தில் நிர்வாகத்துறையில் உயர் பதவி வகித்து எமது பிரதேசத்திற்கும் பாமரமக்கள் வாழும் பல சிறு கிராமங்களுக்கும் பெரும் சேவை புரியவேண்டும் என்பது எனது இலக்காகும்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, குருபக்தி என்பனவற்றோடு பெற்றோரின் சொற்படி ஒழுகுவதுடன் பெயரளவில் கல்வியைக் கற்காது எம்மிலும் பார்க்க பல மடங்கு முன்னிலை பெறுபேறுகளைப் பெற்று எமது கல்லூரிக்கும் எமது பிரதேச மண்ணிற்கும் பெருமை சேர்க்க ஏனைய மாணவர்கள் முன்வேண்டும். அத்துடன் 3'ஏ' உட்பட உயர் பெறுபேறுகள் பெற்று பல மடங்கு உயர வேண்டும் என்ற அடிப்படையில் மாணவர்கள் கல்வி செயற்பாடுகள் தொடரவேண்டும்.

3'ஏ' பெறுபேற்றை பெற்றாலும் மாவட்ட நிலையில் பின் நிலையில் நிற்பது மிகவும் மனதிற்கு வேதனையானது. ஆகையால் மாண்வர்கள் உயர்தரம் கற்க செல்லும்போது தெரிவு செய்யும் பாடங்களை மிகவும் ஆராய்ந்து தெரிவு செய்து மாவட்ட நிலையிலும் அகில இலங்கை நிலையிலும் முன்னிலைப் பெறுபேற்றை பெற வேண்டும் என விரும்புகிறேன்.

## டில்வியா ஞானசீலன்

**பெறுபேறு: ஏபிசி (இராமநாதன் மகளிர் கல்லூரி)**



2000ஆம் ஆண்டு குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து மானிப்பாய் அந்தோனியார் கோயிலுக்கு அருகில் தங்கியிருந்தோம். அப்போது எனக்குப் பார்வை முற்றாக இழக்கும் நிலை ஏற்பட்டு இருந்தது. சிறு வயதில் இருந்தே எனக்குப் பார்வைக் குறைபாடு இருந்தது. நரம்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இவ்வாறான நிலை தோன்றியதாக வைத்தியர்கள் கூறியிருந்தனர். இந்நிலையில் 8ஆம் ஆண்டு படிக்கும் போதி என்னுடைய கண்பார்வை முற்றாகப் போய்விட்டது.

இதனால் மற்றப் பிள்ளைகள் போல என்னால் இயல்பாகக் கற்கமுடியவில்லை. அது தவிர என்னைப் பின்வரிசையில்தான் அமரச் சொன்னார்கள். கண்பார்வையற்ற எனக்கு இவையெல்லாம் சொல்லமுடியாத மனவேதனையை உண்டாக்கின.

இப்படியெல்லாம் நான் துயரங்களைச் சுமந்து கொண்டிருந்தவேளையில்தான் விழிப்புலன் வலுவிழந்தோரின் வாழ்வில் ஒளியினை ஏற்றுகின்ற வாழ்வகம் பற்றி, மானிப்பாய் அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை எனக்குத் தெரியப்படுத்தினார். அதன் பிறகு நான் வாழ்வக அம்மா செல்வி அன்னம்மா சின்னலட்சுமி அவர்களின் நிழலில்தான் வளர்ந்தேன். வாழ்வகத்துக்கு வந்துசேர முன்னர் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குக் கூடத் தோற்றுவேனோ என்பது சந்தேகமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது பட்டப்படிப்பையும் முடித்து, ஒரு விரிவுரையாளராக வருவேன் என்ற நம்பிக்கையும் என்னுள் துளிர்த்துள்ளது.

வாழ்வகத்தில் இணைந்த பிறகு என் வாழ்க்கையே மாறிவிட்டது. பாடசாலைகளிலும் வாழ்வகப் பிள்ளை என்று பரிவுடனும், மதிப்புடனும் என்னிடம் நடந்துகொண்டனர். நானும் மற்றைய பிள்ளைகள் போல் எல்லோருடனும் சகஜமாகப் பழகி, கற்றலை மகிழ்வுடன் மேற்கொள்ள முடிந்தது.

உயர்தரத்திலே தமிழ், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு ஆகிய பாடங்களைப் பயின்றேன். எனினும் எனக்கு வரலாறு என்ற பாடத்தைப் படித்துப் புரிந்து கொள்ளக் கஷ்டமாகவிருந்தது. அதிலிருந்த படவேலைகள் இன்னும் கடினமானவையாகவே இருந்தன. எனினும் அந்தப் பாடத்தை எனக்கு அழகாய் ஊட்டியும், தனியார் வகுப்புக்குச் செல்ல பண உதவி செய்தும் திருமதி யோகராசா ஆசிரியை செய்த உதவி களை என்றும் மறக்கமுடியாது.

இது தவிர எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் குறிப்பாக நிர்மலா ஆசிரியை போன்றோர் எனக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார்கள். எல்லாவற்றையும் விட வாழ்வகச் சமூகம், ரவீந்திரன் ஆசிரியரும் என்னை ஆளாக்குவதற்கு ஆற்றிய அரும்பணியைச் சொல்லில் அடக்கமுடியாது.

எனக்கு இப்போது கிடைத்ததை விட இன்னும் சிறப்பான பெறுபேறு கிடைக்குமென்றே எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவான பேறுபேற்றை எடுத்தது எனக்கும் ஏமாற்றம்தான். ஆனாலும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்பதால் ஆறுதலாகவுள்ளது.

எதிர்காலத்தில் விரிவுரையாளராக உருவாகி, என்போன்ற விழி வலுவற்றவர்களுக்கும் சமூகத்துக்கும் உதவ வேண்டும் என்பதே என்னுடைய இலட்சியமாகவுள்ளது.

**சந்திப்பும், படங்களும்: ஒளண்யன். 3**

## கயிலாயபிள்ளை பிரித்திகா

**பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**



எனது சிறந்த பெறுபேற்றிற்கு பாடசாலை ஆசிரியர்களது ஒத்துழைப்பும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களது பங்களிப்பும் மற்றும் பெற்றோர்களது ஆதரவும் சக மாணவிகளுடைய உதவிகளுமே உறுதுணையாக இருந்தன.

நான் பரீட்சைக்குப் படிக்கின்ற காலங்களில் மின்சாரம் இல்லாத தன்மை மற்றும் வீதிகளில் தரித்து நிற்கவேண்டிய நிலை போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்கியபோதும் அவற்றை பொருட்படுத்தாது எனது முயற்சியில் சிறிதளவு மாற்றமும் இன்றிச் செயற்பட்டதன் காரணமாகச் சிறந்த முறையில் பரீட்சையில் தோற்ற முடிந்தது.

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களினையும் சம அளவாகக் கற்றதுடன் பயிற்சிப் பரீட்சைகளில் அதிக அக்கறை காட்டினேன். மேலும் சிறந்த ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் போன்றோரது ஆலோசனைகள், கற்கை முறைகள் போன்றன எனது இடையறாத முயற்சிக்கு உந்துதலாக அமைந்தது.

எமது பாடத்திட்டத்திலுள்ள அனைத்து விடயங்களினையும் முழுமையாகக் கற்றதனால் எதிர்பார்ப்பிற்கு இடமில்லாமல் வினாக்களை இலகுவாக என்னால் எதிர்நோக்க முடிந்தது. ஆகவே இச்சிறந்த பெறுபேற்றினையும் எதிர்பார்த்திருந்தேன்.

எதிர்காலத்தில் நமது சமூகத்திற்கு சேவையாற்றக்கூடிய ஆசிரியத்துறையில் ஈடுபட விரும்புகிறேன்.

தற்போது கல்வி கற்கும் மாணவர்கள் தமது பாடத் தெரிவுகளை சிறந்த முறையில் தெரிவுசெய்வதுடன் சிறந்த பெறுபேற்றினைப் பெறவேண்டும் என்பதே எனது அவா.

3'ஏ' சித்தி பெற்றும் மாணவர்கள் மாவட்ட நிலையில் பின் தங்கிய நிலையில் இருப்பது வேதனைக்கு உரிய விடயமாகும். ஆகவே இனிவரும் மாணவர்கள் தமது பாடத் தெரிவுகளை சிறப்பாக செய்வதுடன் மாவட்ட நிலையில் முன் நிலையில் வர வேண்டும் என்பதே எனது கருத்து.

## சோமலிங்கம் ஜெயதேவி

**பெறுபேறு: 3ஏ (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)**



எந்தவொரு மாணவரதும் இலட்சியக் கனவு சிறந்த பெறுபேற்றைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்வதே. அந்தவகையில் எனது இலட்சியக் கனவினை நிறைவேற்ற நான் பெற்ற சிறந்த பெறுபேற்றிற்கு எனக்கு பலர் பலவகையிலும் உறுதுணையாய் அமைந்துள்ளனர். நான் A/L கலைப்பிரிவில் நுழையத் தயாரானபோது பாடத்தெரிவு எனக்குப் பூதாகரமாய் அமைந்தது. அச்சமயத்தில் எமது பாடசாலையின் அதிபரும், ஆசிரியர்களும் எனக்குச் சிறந்த வழிகாட்டுதலை வழங்கினார்கள். அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் என்னால் சிறந்த பாடங்களைத் தெரிவுசெய்யமுடிந்தது. மேலும் நான் தெரிவு பாடங்களைச் சிக்கலற்ற முறையில் கற்பதற்கு பாட அட்டவணையைச் சரியான முறையில் அதிபர் எனக்கு அமைத்துத் தந்தார். அது எனக்கு பேருதவியாய் அமைந்தது. மேலும் வரலாறு பாடம் எமது பாடசாலையில் இதுவரை இருக்கவில்லை. என்னைப் போன்ற சில மாணவர்களின் விருப்பத்தின் பெயரில் அதிபர் சிறந்த வரலாற்று ஆசிரியையை எமக்கு ஒழுங்கமைத்துத் தந்தார். அத்துடன் தமிழ், நடனம் என்பவற்றுக்கும் எனக்குத் தரமான ஆசிரியர்களாக பாட சாலையில் கிடைத்தார்கள். அவர்களின் சிறந்த கற்பித்தல்கள், மேலதிக வழிகாட்டல்கள் எனது பெறுபேற்றிற்கு உறுதுணையாய் அமைந்தன. எனது பாடசாலை ஆசிரியர்கள் எனக்கு மேலதிக பல உதவிகளைப் புரிந்தார்கள். பாடம் சம்பந்தமான எனது சந்தேகங்களிற்கு எவ்வித முகச் சுளிப்புமின்றி தமது வேலைப்பளு கூடிய நேரத்திலும் பதிலளித்து ஐயங்களைத் தீர்த்து வைத்து எனக்குப் பக்கபலமாய் உதவி புரிந்தனர்.

எனது பாட ஆசிரியர்கள், அடிக்கடி பரீட்சைகளை நடத்தி எம்மை மதிப்பிட்டு அதற் கேற்ப ஆலோசனைகளையும் வழங்கினார்கள். மேலதிக வகுப்புகளையும் அவர்கள் எமக்காக எடுத்தமை எனக்கு உறுதுணையாய் அமைந்தது. பெற்றோர்கள் எனது வாழ்விலும் மட்டுமல்லாது எனது சிறந்த பெறுபேற்றுக்கும் உறுதுணையாய் அமைந்தனர். எனது குடும்பம் சாதாரண மத்தியதரக் குடும்பம். இருப்பினும் அவர்கள் என்னைச் சிறந்த முறையில் உயர்கல்வி பயிற்றுவித்தனர். தம்மால் முடிந்தளவு எனக்கு உறுதுணையாய் இருந்தனர். எனது தாயார் இரவுநேரங்களில் நான் படிக்கும்போது என்னுடன் கூடவே இருந்துகொள்வார். எனது சகோதரன், சகோதரியும் எனக்கு பல வகைகளில் உதவி செய்தனர். வீட்டு வேலைகளை தாம் பொறுப்பேற்று, நான் இலகுவாகப் படிக்க வழி சமைத்தனர். எனது நண்பிகள் பலரும் மேலதிக பல பாடக் குறிப்புகளை தந்து உதவியதோடு எனது பாட சந்தேகங்கள் சிலவற்றையும் தீர்த்து வைத்தனர்.

நல்ல பெறுபேற்றை நான் பெற்றுக்கொள்வதற்காக தனித்துவமான வழிமுறைகளையும் கையாண்டேன். சிறுவயது முதலே அன்றைய பாடங்களை அன்றே படித்து வைக்கும் பழக்கம் என்னிடம் இருந்தது. உயர் வகுப்பிலும் அதன் வழக்கம் தொடர்ந்தமையால் நான் பரீட்சை இறுதிநேரத்தில் பெரிதும் சிரமப்படவில்லை.

பாடங்களை மனனம் செய்வதைத் தவிர்த்து விளங்கிப் படிப்பதை முறையாகக் கொண்டேன். அதிகாலை நேரமே பாடம் படிப்பதற்கு உகந்த நேரமாகையால் நான் அதிகாலை படிப் பதையே தினமும் வழக்கமாகக் கொண்டேன். பரீட்சைகள் அனைத்திலும் தோற்றும் பழக்கம் என்னிடம் இருந்தது. இக்காரணத்தை முன்னிட்டும் நான் பரீட்சைகளைத் தவறவிடுவதில்லை. ஏனெனில் பரீட்சை மூலமாகவே எம்மை நாம் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். மேலும் நான் நூலகங்களில் அதிக நேரத் தைச் செலவழிப்ப துண்டு. பாடசாலை ஓய்வுப் பாடங்களில் நான் நூலகத்தையே நாடிச்செல்வேன். நூலகப் பயன்பாடு எனக்குப் பல வழிகளில் உதவியது. மேலதிக பாட விளக்கங்களிற்காக நான் தனியார் கல்வி நிறுவனங்களையும் நாடினேன். அத்துடன் பாடக் குறிப்பு முழுவதையும் படிக்காமல் அவற்றிலுள்ள முக்கிய குறிப்புகளை குறித்து அவற்றைப் படிப்பதையே வழக்கமாகக் கொண்டேன். தெரிவுசெய்த பாடப்பகுதிகளை படிப்பதைத் தவிர்த்துப் பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளையும் படித்தேன். நான் 3 பாடங்களிற்கும் சமமான நேரங்களை ஒதுக்கினேன். ஒரு பாடத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது ஒருநாளைக்கு ஒதுக்கிப் படித்தேன்.

பரீட்சைக்கு தயார்படுத்தும்போது சில பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. இரவுநேரம் மின்வெட்டு எனக்குப் பாரிய பிரச்சினையாக அமைந்தது. கைவிளக்குகளைப் பயன்படுத்தியே இரவு நேரங்களில் எனது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டேன். நடன பாடத்தில் செயன்முறைப் பரீட்சை தாமதமாகவே நடைபெறும். எனது பாடசாலை நடன ஆசிரியை தனது வேறு பாடநேரங்களிலும் எனக்குச் செயன்முறை அளித்ததன் மூலம் என்னால் இச்சிக்கலில் இருந்து மீள முடிந்தது.

எனது பெறுபேற்றை நான் அறிந்து கொண்டதும் நான் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டேன். என்மீது என் பெற்றோர், ஆசிரியர்கள் கொண்ட நம்பிக்கை வீண்போகவில்லை என்பதை உணர்ந்துகொண்டேன். எனது விடாமுயற்சிக்கும் அர்ப்பணிப்பிற்கும் கிடைத்த வெற்றி இது என நினைத்தேன்.

நான் தரம் 5இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தேன். என்னுடன் சித்தியடைந்த பிற மாணவர்கள் நகர்ப்புற பாடசாலையை நாடிச்சென்றபோதும் நான் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்தேன். தமிழார்வம் என்னிடம் இயல்பாகவே இருந்தது. தரம் 6 முதலே நான் தமிழ்த்தின போட்டிகளில் கலந்துகொண்டுள்ளேன். எனது தமிழாசிரியை அதற்குப் பேருதவியாய் இருந்தார். 'டயலொக்' நிறுவனம் நடத்திய கட்டுரைப்போட்டியில் எனக்கு தேசிய மட்டத்தில் இடம் கிடைத்தது. மேலும் கட்டுரை, சிறுகதை, திறனாய்வுப் போட்டிகளில் எனக்கு கோட்ட, வலய மட்டங்களில் இடம் கிடைத்தது. இப்போட்டிகளும் அவற்றில் எனக்குக் கிடைத்த வெற்றிகளும் கூட உயர்தரப் பரீட்சையை சிறந்த முறையில் எழுதுவதற்கு உதவியாக அமைந்தது. தரப்பட்ட வினாக்களிற்கு சிறந்த முறையில் விடையளிக்க எனக்கு அவை உதவின.

இச்சந்தர்ப்பத்தில் என்மீது தனிப்பட்ட அக்கறை எடுத்து எனக்கு பல வகையிலும் உறுதுணையாய் அமைந்துகொண்ட எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எனது பெற்றோர், சகோதரன், சகோதரி மற்றும் எனது நண்பிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பது எனது கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டை விலை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.குடாநாட்டில் முட்டையின் விலை திடீரெனச் சரிவடைந்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கோழி முட்டையொன்று 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. எனினும் தற்போது கோழி முட்டையொன்றை 10 ரூபாவுக்குக் கடைகளில் வாங்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு கோழிமுட்டையின் விலை திடீரென வீழ்ச்சியடைந்தமைக்கு கொழும்பில் இருந்து விமானம் மூலம் பெருந்தொகையான முட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டதே முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முட்டையின் விலை சரிவடைந்துள்ளதால் யாழ்.மாவட்ட கோழிப்பண்ணையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(04-224)

## மரண அறிவித்தல்



### முத்துத்தம்பி தியாகராசா

(ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர், கொழும்பு, பாணந்துறை, மட்டக்களப்பு)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு தற்போது பிரேசிலையும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி தியாகராசா 18.01.2009 ஞாயிற்றுக்கிழமை பிரேசிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - பராசக்தி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான என்.கே.இராசசிங்கம் - மதியாபரணம் தம்பதியரின் மருமகனும் மனோரஞ்சிதமணியின் அன்புக் கணவரும் Dr.ஆதித்தன் (லண்டன்), Dr.லாவண்யா (பிரேசில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானி (லண்டன்), அலன் (பிரேசில்) ஆகியோரின் அன்பு மாமனும் நிவேதன், நிவேதா, யாமினி ஆகியோரின் ஆசைப்பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (மலாயன் டிரேடிங் கம்பனி, யாழ்ப்பாணம்), கனகசிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற குமாரசிங்கம் மற்றும் தனரஞ்சிதமணி, குலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சிவகுருநாதனின் (தினகரன் பிரதம ஆசிரியர்) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2009) செவ்வாய்க்கிழமை பிரேசிலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இரஞ்சித வாசா",
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
T.P.: 060 2219079,
பிரேசில்: 00556932231567

தகவல்:
இ.குலசிங்கம் (மைத்துனர்),
ஓய்வுநிலை அதிபர்,
ஊரெழு கணேச வித்தியாலயம்.

(81950)

## கந்தபுராணப் படிப்பு நிறைவு

சுழிபுரம்,ஜன.20

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் கடந்த மூன்று மாதங்களாகத் தொடர்ந்து படிக்கப்பட்டு வரும் கந்தபுராணப் படிப்பு இம்மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையவுள்ளது. தினமும் பிற்பகல் 2 மணி முதல் ஆரம்பமாகி மாலை 5 மணி வரை நடைபெற்று வருகிறது.

கந்தபுராணப் படிப்பு நிறைவன்று கந்தபுராண ஏடுகள் தேரில் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். வருடா வருடம் இந்நிகழ்வு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (201-28)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவி

நல்லூர்,ஜன.20

உரும்பிராய் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள அன்னங்கைப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் 20 பேருக்கு சுயதொழில் முயற்சியாக கோழி வளர்ப்புக்கென ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் உதவிகளை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அச்செழு போயிட்டி பகுதியில் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ஆடு, மாடு, கோழி வளர்ப்புக் கென வாழ்வாதார உதவிகளை வழங்க உலக தரிசனம் நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(04-111)

## 31ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்

### கபிரியேல் இம்மனுவல்

(சொய்சா)
(ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் அதிகாரி)

மலர்வு
20*09*1941

உதிர்வு
21*12*2008



ஏற்றமிகு வாழ்வு தந்து எனைவிட்டு ஏன் பிரிந்தாய்
ஆற்றுவோரோ அத்தார் மாற்றவும் இயலாமல்
மறக்கவும் முடியாமல் மதிமயங்கி தவிக்கின்றேன்
போற்றிடும் வானவரும் பூவுலகில் உள்ளோரும்
சாற்றிட முடியாத தங்கமுகம் தரைசாய்ந்ததே ஐயகோ..
மைவிழிமேல் பாய்ந்த மகிபதியே "மைற்றி"யே
உன்னை மறக்கவும் முடியவில்லை.

(81887)

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இன்று (20.01.2009) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு புனித காணிக்கை மாதா தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் பங்குபற்றி அவருக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

17/1, மத்திய கிழக்கு வீதி,
குருநகர். [0602218346]

உன் மறைவால் தவிக்கும்:
மனைவி - இ.கிளைமென்றா (ராசாத்தி).

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்




உயர்ந்த உள்ளம் படைத்த உயர்வான தலைவனே!
ஊர் போற்றும் உத்தமனே, எண்ணத்துள் எழிலவனே
பாசத்தின் பிறப்பிடமே, குடும்பத்தின் குல விளக்கே
மாசற்ற நெஞ்சுடனும் மலர்ந்த முகத்துடனும்
வாழ்ந்து காட்டிய எம் அப்பாவே!!
ஈரேழு ஆண்டுகள் கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
நீண்டிருக்கும் நினைவுகளை
நெஞ்சிலே சுமந்திருக்கும்..........


அம்மன் கோவிலடி,
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் அந்தோனிபர்னாந்து செபமாலைமுத்து

(யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்)




'நானே உலகின் ஒளி. என்னை பின் செல்பவன் இருளில் நடவான் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான். அரு.8:12

கண் எதிரே காலம் எல்லாம் எங்களை தாங்கி நின்ற பப்பா
நாங்கள் ஒளிர உங்களையே மெழுகாய் உருக்கினீர்களே
கண்திறந்து பார்க்கின்றோம். ஆனால் எம்முன் நீங்கள் இல்லையே பப்பா,

நிலவில்லா வானம்போல் ஆனதே எம் இதயம்
நீங்கள் இல்லா வாழ்க்கை....தாங்குவோமா இந்நிலையை
ஏங்கி ...கின்றோம் உங்கள் குரல் கேட்க
ஆறுத... ...ல்ல யார் இருந்தென்ன,
பப்பா... என்று சொல்லி அழைக்க எமக்கு யாருமில்லையே
ஆண்டு ஒன்று என்ன ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் ஆறாது
பப்பா எங்கள் மனம்.

இல.27... ...மோட்டை,
யாழ்ப்பா...

(81807)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்




### திருமதி கார்த்திகேயனி கதிரவேலு

ஆயிலி, காரைநகர்

திதி: 20.01.2009

அன்பினால் எம்மை எல்லாம் அரவணைத்த எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
உங்களைப் பிரிந்து ஓராண்டு உருண்டோடிப் போனதம்மா
ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டானாலும் உங்களின் அழகுமுகம், அன்பு முகம்
எங்களின் நெஞ்சங்களில் தவழ்ந்து கொண்டேயிருக்கும்.
எங்களின் அன்புச் செல்லமே அம்மா!
உங்களின் தூய்மையான பொற்பாதங்களுக்கு
எங்களின் கண்ணீரையே காணிக்கையாக்குகின்றோம் ஆசை அம்மாவே!
உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்:
...ாஸ் (லண்டன்).

அன்புக்கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் நிலைகொண்டிருந்த இஸ்ரேலியப் படைகள் வாபஸ்

டெல் அவிவ், ஜன. 20

காஸாவுக்குள் நிலைகொண்டுள்ள இஸ் ரேலியத் துருப்புகள் உடனடியாக வாபஸ் பெற மாட்டா என சனிக்கிழமை அறிவித் தல் விடுத்த இஸ்ரேலியப் பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட், திடீரென தமது நிலைப் பாட்டை ஞாயிற்றுக்கிழமை மாற்றிக் கொண்டார்.

காஸா மீது மூன்று வாரங்களுக்கு மேலாக தாக்குதல்கள் நடத்தி வந்த இஸ்ரேல் சனிக்கிழமை ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்தது. இதையடுத்து, உடனடி படை வாபஸ் கிடையாது என ஒல்மேர்ட் அறிவித்திருந்தார்.



பலஸ்தீனத்தின் மீதான தாக்குதலை தாங்களாகவே நிறுத்திக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை காலை காஸாவிலிருந்து தங்கள் நாட்டுக்குத் திரும்பிய இஸ்ரேல் இராணுவ வீரர்கள் வெற்றிச் சின்னங்களைக் காட்டி மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். ஆனால், ஹமாஸ் இயக்கத்தவர் இதன் பின்னரும் ரொக்கெட்டுகளை இஸ்ரேல் மீது செலுத்தி தாக்குதல் நடத்தினர். எனவே, இந்தப் போர்நிறுத்தம் நீடிக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எனினும், மறுதினமான ஞாயிற்றுக்கிழமை, ஐரோப்பிய தலைவர்களுடன்இணைந்து தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் ஈகுட் ஒல்மேர்ட் பேசுகையில், ''இயன்ற வரை அதிவிரைவில் காஸாவை விட்டு இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறிவிடும்'' என்றார்.

''காஸாவை எம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நாம் அங்கு காலடி வைக்கவில்லை. காஸாவுக்குள் தொடர்ந்து இருக்கவேண்டிய அவசியமும் கிடையாது. இயன்றவரை அதிகூடிய கெதியில் வெளியேறிவிடவேண்டுமென்பதே எங்களின் நோக்கமாகும்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

யுத்த நிறுத்தப் பிரகடனத்துக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு, ஐரோப்பிய தலைவர்கள் இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவ்வை வந்தடைந்திருந்தனர்.

பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுன் இதில் பேசுகையில்,''காஸாவுக்கான கடவைகளை உடனடியாக இஸ்ரேல் திறந்துவிடவேண்டும். இது மிகமிக அவசியம். இது நிரந்தர சமாதானத்துக்கான பேச்சுகளை மீள ஆரம்பிக்க வழிசமைக்கும்'' என்றார்.

''மூன்று வாரகாலத் தாக்குதல்களை மேற்கொண்டு வந்த இஸ்ரேலிய துருப்புகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனத்துக்குப் பின்னர் வெளியேறத் தொடங்கிவிட்டன. கவச வண்டிகளும், தாங்கிகளும் நிலைகொண்டிருந்த இடங்களிலிருந்து வெளியேறுகின்றன'' என பலஸ்தீன அதிகாரிகள் ஊடகங்களுக் குத் தெரிவித்தார்கள்.

## ஆஸ்திரேலியத் தீவில் திங்களன்று பூகம்பம்

சிட்னி, ஜன. 20

ஆஸ்திரேலியாவிலுள்ள நியூ கலேடோனியா பகுதியில் அமைந்துள்ள லாயல்டி தீவில் நேற்று திங்கட்கிழமை காலை கடும் பூகம்பம் தாக்கியது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரித்தது.

கடலுக்கு அடியில் 52 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 6.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என்றும் அது தெரிவித்தது. எனினும், இந்த பூகம்பம் காரணமாக ஆழிப்பேரலை தாக்குதல் எச்சரிக்கை எதுவும் உடனடியாக விடுக்கப்படவில்லை.

இந்த பூகம்பம் காரணமாக உயிரிழப்போ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த பூகம்பம் மிகவும் பின்தங்கிய பகுதியில் ஏற்பட்டுள்ளமையால் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று ஆஸ்திரேலிய புவியியல் ஆய்வு மையம் கூறியது.

உலக அரங்கில்

## பிரான்ஸில் இராணுவ ஹெலி விபத்து: ஏழு சிப்பாய்கள் பலி; இருவர் மீட்பு

கபொன், ஜன. 20

ஆபிரிக்க நாடான கபொனின் துருப்புகளுடன் இணைந்து, கூட்டுப் பயிற்சியில் ஈடுபடப் புறப்பட்ட பிரான்ஸ் இராணுவ ஹெலிக்கொப்டரொன்று கடலுக்குள் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

''இவ்விபத்தில் ஏழு பிரான்ஸ் வீரர்கள் பலியானார்கள். இருவர் மீட்கப்பட்டனர். ஒருவர் காணாமற்போய்விட்டார். மீட்புப் பணிகள் நீடிக்கின்றன'' என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

''பிரான்ஸ் கடற்படைக் கப்பலிலிருந்து கிளம்பிய இந்த ஹெலிக்கொப்டர் போர்ட் ஜெண்டில் என்னுமிடத்தை அண்மித்ததும் கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

''பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷியின் பணிப்புரைக்கிணங்க, மீட்புப் பணிகளைப் பார்வையிடுவதற்காக பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ஹேவி மொரின், கபொன் பயணத்தை உடனடியாக மேற்கொண்டார்'' என பேச்சாளரொருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

# ஹமாஸ் இயக்கமும் போர் நிறுத்த அறிவிப்பு இஸ்ரேல் துருப்புகளை வெளியேறக் கோரிக்கை



காஸா, ஜன. 20

காஸாவிலுள்ள ஹமாஸ் இயக்கம் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலைப் போன்று தானும் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தப் பிரகடனம் செய்தது. அத்துடன் ஒருவார காலத்துக்குள் அனைத்து இஸ்ரேலிய துருப்புகளும் காஸா மண்ணை விட்டு வெளியேறிவிடவேண்டுமென காலக்கெடு விதித்தது.

''22 நாள்கள் வரை நடைபெற்றுவந்த மோதல்களின்போது உயிருக்கு அஞ்சி வீடுகளைவிட்டு வெளியேறியிருந்த மக்கள் திரும்பத் தொடங்கியுள்ளனர். இவர்களில் அநேகர் ஒளிவுமறைவான இடங்களில் தங்கியிருந்துள்ளார்கள்'' என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

''இரு தரப்பு சண்டையின்போது, வீடுகளைவிட்டு வெளியேறி ஐ.நாவின் பாடசாலைப் பிராந்தியத்துக்குள் தஞ்சமடைந்துள்ள 45 ஆயிரம் அகதிகள் சண்டை நிறுத்தத்தால் புத்துயிர் பெற்றுள்ளனர். இவர்களில் அநேகர் தம் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

''இப்படித் திரும்பி வந்தவர்கள் தங்கள் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளமையையும், அழித்து நிர்மூலமாக்கப் பட்டுள்ளமையையும் கண்டு கண்ணீர் வடித்தார்கள். பலர் வீடு, வாசல்களை முற்றாக இழந்துவிட்டமையால், மீண்டும் அகதி முகாம்களுக்கே சென்றுள்ளார்கள்'' என்றும் இந்த அதிகாரிகள் விளக்கினார்கள்.

''4 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்புக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன'' என பலஸ்தீன புள்ளிவிவரத் திரட்டல் பணியகம் தெரிவித்தது. காஸாவில் சேதமாக்கப்பட்ட உட்கட்டமைப்புகளை திருத்தியமைக்க குறைந்தபட்சம் 160 கோடி டொலர் தேவை என மேற்கத்தேய இராஜதந்திரிகள் ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்கள்.



அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரில் ஒட்டிப் பிறந்த இவ்விரு இரட்டைக் குழந்தைகளை 5 மாத கால வளர்ச்சிக்குப் பின்னர் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்து பிரித்துள்ளனர் டாக்டர்கள். தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்ட குழந்தைகளை அவற்றின் தாயார் ஆஷ்லே பிராங்கிடம் காட்டியபோது அவரால் நம்பவே முடியவில்லை. அவர் குழந்தைகளைக் கண்டு பூரித்துப் போனார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம் இது.

# எத்தகைய கடினமான சவால்களையும் அமெரிக்கா சாதுரியமாகக் கையாளும்

## வரவேற்பு வைபவத்தில் ஒபாமா கருத்து



வாஷிங்டன்,ஜன.20

''அமெரிக்கா இரு வேறு போர்களில் ஈடுபட்டுள்ளது. அதே வேளை, பொருளாதார நெருக்கடிகளையும் வெகு சாதுரியமாகக் கையாள்கிறது. எத்தகைய கடினமான சவால்களையும் அதனால் கடக்க முடியும். அமெரிக்காவைப் பொறுத்தமட்டில், அதற்கு எதுவும் சாத்தியப்படும்.''

- இவ்வாறு அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக இன்று செவ்வாய்க்கிழமை சம்பிரதாயபூர்வமாக பதவியேற்கும் பராக் ஒபாமா, தமக்களிக்கப்பட்ட பூர்வாங்க வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.அத்துடன்மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளையும் சுட்டிக் காட்டினார்.

இப்பூர்வாங்க வரவேற்பு வைபவம் ஞாயிற்றுக்கிழமை வாஷிங்டன் லிங்கன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. அமெரிக்க இசையுலகில் கொடிகட்டிப் பறக்கும் பியோன்ஸ் யு2 ஆகியோர் உட்பட புகழ்பெற்ற பல இசை, வாத்தியக் கலைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

ஒபாமா தொடர்ந்து பேசுகையில், ''அமெரிக்கா பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவற்றிற்கு அவசியம் பரிகாரம் காணப்படவேண்டும். இதற்கும் கால அவகாசம் தேவை. இதற்கான வழி நீண்டதாக இருக்கலாம். ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாகவும்இருக்கலாம். எனினும், எம் பயணம்வெற்றிப் பயணமாகவே இருக்கும்'' என்றார்.

''இதற்கான பாரிய கடமையும், கடப்பாடும் எதிரில் உள்ளன. எதையும் ஐக்கிய அமெரிக்கா எம்மிடம் ஒப்படைக்கலாம். அதேவேளை, எமது நிறுவுநர்களின் அபிலாஷைகளும், கனவுகளும் எம்மை ஊக்குவிக்கும். வழி நடத்தும். இந்த நம்பிக்கைப் பிடிப்போடுதான் நான் இங்கு நிற்கின்றேன்'' என்றும் அவர் கூறினார்.

''எங்கள் வாழ்க்கையை நாங்கள் கட்டி எழுப்ப வேண்டும். எங்களைவிட எங்கள் பிள்ளைகள் மேம்பாடடைய வேண்டும். இதனையே நாங்கள் பார்க்க விரும்புகிறோம். அமெரிக்கர்களாகிய எங்களுக்குக் கொடுக்கப்பட்ட இதற்கான வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டுமென்றே ஆண்களும், பெண்களும் கேட்கிறார்கள். இவர்கள் பல்வேறுபட்ட பின்னணிகளைக் கொண்டவர்கள்'' என்றும் ஒபாமா சுட்டிக் காட்டினார்.

இவ்வைபவத்திற்கு முன்னர் பராக் ஒபாமா, ஆர்லிங்டன் தேசிய மயானத்துக்குச் சென்று [illegible] காணப்படாத இராணுவ வீரர்களின் ஞாபகார்த்தச் சின்னத்துக்கு மலர் வளையம் சார்த்தி அஞ்சலி செலுத்தினார்.

# பாகிஸ்தான் வடமேற்கில் 18 தீவிரவாதிகள் பலி

''பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தின் தலைநகரான பெஷாவர் அருகேயுள்ள முகமாண்ட் நகரில் இராணுவத்துக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்ட மோதலில் 14 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். எட்டு பேர் கைது செய்யப்பட்டார்கள்'' என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

''இம்மோதலில் இரு இராணுவ வீரர்கள் பலியாயினர். வாகனங்களில் வந்து இராணுவச் சோதனைச்சாவடியைத் தாக்க இத் தீவிரவாதிகள் முற்பட்டார்கள். இச்சமயம் இராணுவத்துக்கும்,தீவிரவாதிகளுக்குமிடையே இம்மோதல் ஏற்பட்டது'' என்றும் இவ்வட்டாரம் குறிப்பிட்டது.

''கடந்த வாரமும் பெஷாவரில் ஒரு இராணுவ முகாமும், இரு சோதனைச்சாவடிகளும் 600இக்கு மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகளின் கடும் தாக்குதல்களுக்கு இலக்காகின. இத்தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன'' என இராணுவ அதிகாரியொருவர் கூறினார்.

''இராணுவம் துரிதமாகச் செயற்பட்டு மேற்கொண்ட உக்கிரத் தாக்குதல்களில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். 22 பேர் காயமடைந்தனர். 6 இராணுவ வீரர்கள் பலியாயினர். இப்பிராந்தியம் தலிபான் தீவிரவாதிகளின் கோட்டையென வர்ணிக்கப்படுகிறது'' என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரணாப் விஜயத்தின் முன்னோடியாகவே இலங்கை சென்று திரும்பினார் சிவ்சங்கர்

## தங்கபாலு தெரிவிப்பு

சென்னை, ஜனவரி 20

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கிறார். அதன் முன்னோட்டமாகத்தான் வெளியுறவுச் செயலர் சிவசங்கர்மேனன் அங்கு சென்று வந்துள்ளார்.

- இவ்வாறு தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சினையால் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பலவீனம் அடையும் என்று திருமாவளவன் கூறியுள்ளார். ஒன்றல்ல, ஆயிரம் திருமாவளவன் வந்தாலும் மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க முடியாது.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவற்றைக் கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர், அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறு நிலைகளில் இந்திய அரசின் நிலைப்பாட்டை விளக்கி, அங்கு நிரந்தர அமைதி தீர்வு ஏற்பட வாய்ப்பாக சிவ்சங்கர் மேனன் செயற்பட்டு இந்தியா திரும்பியிருக்கிறார். 1987இல் நிறைவேற்றப்பட்ட ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை நிறைவேற்ற பரிசீலனை செய்கிறோம் என இலங்கை அரசு கூறியிருக்கின்றமையைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

போர் அற்ற சூழ்நிலையில் இலங்கை பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இலங்கை தன்னுரிமை பெற்ற நாடு. மற்றொரு நாடு அதன் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது.

விடுதலைப் புலிகளை காங்கிரஸ் ஆதரிக்கவில்லை. ஆதரிக்கவும் மாட்டோம். போர் காரணமாக அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப் படக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெளிவான கருத்தை தெரிவித்திருக்கிறார். 2 முறை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் பேசியிருக்கிறார். வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கைக்குச் செல்ல இருக்கிறார். அதன் முன்னோட்டமாகத்தான் சிவ்சங்கர் மேனன் அங்கு சென்று வந்துள்ளார்.

இதுவரையில் இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவிகள் எதுவும் செய்யவில்லை. சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆயுதங்களை வழங்குகின்றன. சீனா ஆயுதம் வழங்குவதை மறைத்து விட்டு கம்யூனிஸ்டு தோழர்கள் இந்தியா இராணுவ உதவிகள் செய்கிறது என வதந்தியைப் பரப்புகிறார்கள்.

இலங்கை பிரச்சினையில் முதல்வர் கருணாநிதி எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியவை. மத்திய அரசின் முயற்சியில்லாமல் இலங்கையில் அமைதி திரும்ப வாய்ப்புக் கிடையாது. அதை விடுத்து தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகளால் எதுவும் வரப்போவதில்லை.

தமிழக அரசுடன் இணைந்து, மத்திய அரசு எடுக்கும் முயற்சிகளை ஆதரிக்க வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி தமிழ்நாட்டில் அமைதியைக் கெடுத்து விடக் கூடாது. வெறும் கூச்சல், கூக்குரல்போடுவதால் மட்டும் காரியம் நடக்காது.

இலங்கை தமிழர் பிரச்சினையால் நாடாமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பலவீனம் அடையும் என்று திருமாவளவன் கூறியுள்ளார். ஒன்றல்ல, ஆயிரம் திருமாவளவன் வந்தாலும் மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க முடியாது. இலங்கைப் பிரச்சினையைவைத்து தமிழகத்தில் அரசியல் செய்ய முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் திகதி அறிவிக்கப்படவில்லை. காங்கிரஸ் தலைமைதான் கூட்டணி குறித்து முடிவு செய்யும். தேர்தல் நேரத்தில் கூட்டணி மேலும் பலம் அடையும் - என்றார்.

# ஜெயலலிதாவின் சமாளிப்பு; கருணாநிதி கிண்டல்

இலங்கை இராணுவத்துக்கு ஆதரவான ஜெயலலிதாவின் பேச்சுக்கு, அவருடன் கூட்டணி வைத்துள்ள கட்சித் தலைவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து, நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு-

போர் நடக்கும் போது, அப்பாவி மக்கள் கொல்லப்படுவது உலகில் எங்கும் நடப்பதுதான் என்று இலங்கை போர் பற்றி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியிருக்கிறார் .

இதுபற்றி அ.தி.மு.க. அணியிலுள்ள வைகோவும், தா.பாண்டியனும், என்.வரதராஜனும் தான் பதில் சொல்ல வேண்டும்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனின் உண்ணாவிரதத்துக்கு அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து, நேரடியாகப் பதில் சொல்ல முடியாமல், வேறு எதையெதையோ ஜெயலலிதா சொல்லி சமாளித்து இருக்கிறார்.

## போர் நிறுத்தம் கோரி தமிழகத்தில் தொடரும் ஆர்ப்பாட்டம்:

# பஸ்களுக்கு தீ வைப்பவர்களை கண்டதும் சுட்டுத்தள்ள உத்தரவு

சென்னை, ஜன.20

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் சென்னை அருகே கால வரையற்ற உண்ணாவிரதத்தை தொடங்கினார்.

பல்வேறு கட்சித் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, 4ஆவது நாளான நேற்றுமுன்தினம் மாலை உண்ணாவிரதத்தை திருமாவளவன் முடித்துக்கொண்டார்.

திருமாவின் உண்ணாவிரதப் போராட்டத்தின் எதிரொலியாக, தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும், மறியல் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இந்தப் போராட்டத்தின்போது சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. கடந்த சனிக்கிழமை 5 பஸ்கள் எரிக்கப்பட்டன. 21 பஸ்கள் உடைக்கப்பட்டன. நேற்றுமுன்தினமும் பல்வேறு இடங்களில் போராட்டம் தொடர்ந்தது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே, புதுச்சேரியில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த தமிழக அரசு பஸ், நேற்றுமுன்தினம் காலை பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டது. முன்னதாக அந்த பஸ்ஸுக்குள் நுழைந்த மர்ம மனிதர்கள், பஸ் சாரதி பழனி, நடத்துநர் முருகானந்தம் ஆகியோரை கத்தியால் வெட்டினர்.

மதுரையில் நேற்றுமுன்தினம் 8 பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இதையொட்டி 7 பேர் கைது செய்யப்பட்டனர். தர்மபுரி அருகே 2 பஸ்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. வேலூர் மாவட்டம், ஆம்பூர் அருகே அரசு பஸ் ஒன்று, கற்கள் மற்றும் உருட்டுக்கட்டைகள் வீசி தாக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக 5 பஸ்கள் தீவைத்து எரிக்கப்



பட்டன. 20 பஸ்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் 20 பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. இதையொட்டி, இரு மாவட்டங்களிலும் இதுவரை 40 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

சேலம் மாவட்டம், சங்ககிரியில் ரயில் மறியலில் ஈடுபட முயன்ற ஆதி தமிழர் பேரவையை சேர்ந்த 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

நெல்லையை அடுத்த பாளையங்கோட்டை பஸ் நிலையத்தில் மறியலில் ஈடுபட்ட ஆதி தமிழர் பேரவையை சேர்ந்த 18 பேரும், தூத்துக்குடியில் மறியலில் ஈடுபட்ட 24 பேரும், கடையம் அருகே பஸ் மீது கல்வீசிய 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 2 நாள்களாக வன்முறை சம்பவங்கள் நீடித்து வருவதால், விழுப்புரம் மாவட்டத்தில் இரவில் கிராமப்புறங்களுக்கு செல்லும் பஸ்கள் நிறுத்தப்பட்டு உள்ளன. புதுச்சேரிப் பகுதியிலும் பல இடங்களில் பஸ்கள் உடைக்கப்பட்டதால், தனியார் பஸ்கள் நிறுத்தப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும் என்று தமிழக பொலிஸ் டி.ஜி.பி. கே.பி.ஜெயின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதையொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பொது அமைதிக்கும், பொதுமக்களின் உயிர் பாதுகாப்புக்கும், உடைமைகளுக்கும் ஏற்படுகின்ற இழப்பை அனுமதிக்க முடியாது. இத்தகைய சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைப்பது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

இதற்கிடையில், வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெற்று வரும் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில், யாராவது பஸ்களை எரிக்க முயன்றாலோ அல்லது பஸ்களின் கண்ணாடிகளை உடைக்க முயன்றாலோ அவர்களைக் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்குக் கடத்திச் செல்லப்படவிருந்த வெடிபொருள்கள் சுங்கத்துறையினரால் மீட்பு!

## கன்னிராஜபுரம் கடற்கரையில்

இராமநாதபுரம், ஜன. 20

இலங்கைக்குக் கடத்திச் செல்வதற்காக கன்னிராஜபுரம் கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அருகே உள்ளது கன்னிராஜபுரம். இங்குள்ள கடற்கரையில் மணலில் புதைக்கப்பட்ட பிளாஸ்டிக் கான் ஒன்று நேற்றுமுன்தினம் காலை கடல் அலையால் அடித்து செல்லப்பட்டு மிதந்து கொண்டிருந்தது. அதனை நேரில் பார்த்த அப்பகுதியினர் சந்தேகமடைந்து சுங்க அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து இராமநாதபுரம் சுங்கத் துறைத்துறையினர் விரைந்து சென்று அந்த பிளாஸ்டிக் கானைக் கைப்பற்றினர். பின்னர் அதனை இராமநாதபுரம் சுங்கத் துறை அலுவலகத்திற்குக் கொண்டு வந்தனர்.

பின்னர் அந்த கானை திறந்து பார்த்த போது, இளஞ்சிவப்பு நிறத்தில் 295 பைக்கட்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 'எக்ஸ் புளோசிவ் பேஸ்ட்' என பெயரிடப்பட்ட வெடிகுண்டு தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மிகவும் நாசம் விளைவிக்கக்கூடிய இந்த வெடிபொருள் பரிசோதனைக்காக ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே கடும் போர் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் இருந்து இலங்கைக்கு வெடிபொருள்கள் கடத்திச் செல்வதற்காக இவைகொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவற்றை யார் கொண்டு வந்தார்கள். இதில் தொடர்புடைய கடத்தல் பிரமுகர்கள் யார் என்பது குறித்து சுங்கத் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து கடலோரப் பகுதிகள் முழுவதும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சமீபகாலத்தில் கன்னிராஜபுரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்குக் கடத்தி செல்வதற்காக கொண்டுவரப்பட்ட வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

# இந்தியா தப்ப முயன்று பிடிபட்ட தமிழர்களை சித்திரவதை செய்கிறது இலங்கை இராணுவம்

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு



இதுதான் எங்களின் அலங்கோலம்..... வாழ்வினில் அறியாத பெருங்கோலம்......

மண்டபம், ஜன. 20

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு படகு மூலம் தப்ப முயன்று பிடிபட்ட தமிழர்களை இராணுவத்தினர், மன்னார் பகுதி முகாமில் அடைத்துவைத்து சித்திரவதை செய்கின்றனர். இனிமேல் இலங்கையில் அமைதி திரும்பும் என்ற நம்பிக்கை எங்களுக்கில்லை - என்று மண்டபம் வந்த அகதிகள் கூறினர் என தமிழக நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை மன்னார் பகுதியைச் சேர்ந்த [illegible] உட்பட 10 அகதிகள் படகு மூலம் மண்டபம் வேதாளையில் வந்திறங்கினர்.

இவர்களில் அஜீத் (வயது - 27) கூறுகையில் -

இலங்கை இராணுவத்தின் கெடுபிடியால் மீன்பிடித் தொழில் செய்ய முடியவில்லை. மாதத்தில் பாதி நாள்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாமல் பசியால் வாடினோம். இரவில் செல்லும் தமிழ்ப் பெண்களை இராணுவத்தினர் வல்லுறவுக்குட்படுத்துகின்றனர். கடந்த வாரம் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட ஒரு இளம்பெண் மனநலம் பாதிக்கப்பட்டு பைத்தியமாக அலைகிறாள்.

இந்தியா தப்பி வர முயற்சிக்கும் அப்பாவி மக்களை, இலங்கை இராணுவத்தினர் மன்னார் பகுதி முகாமில் அடைத்து சித்திரவதை செய்கின்றனர். இனி இலங்கையில் அமைதி திரும்பும் என்ற நம்பிக்கை எங்களுக்கில்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல துறைகளிலும் நாம் மீண்டெழுவதற்கு கல்வியை முதன்மைநிலைக்கு கட்டியெழுப்புவோம்

## வடக்கு மாகாணக் கல்விச் செயலாளர்

வேலணை, ஜன.20

இன்றைய சூழலின் தாக்கம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. கல்வி நிலையில் மிகவும் பின்தங்கியுள்ளோம். இதிலிருந்து நாம் மீண்டெழுவதற்கு கல்வியில் முதன்மை நிலைக்கு எமது பிரதேசத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். கல்வி அமுலாக்கத்தில் தொடர்புடைய அனைவரும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வரவேண்டும். இவ்வாறு



வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இளங்கோவன் கூறினார்.

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்ற வலயக்கல்வி அலுவலக அலுவலர்களுக்கான வருடாந்த கல்வித்திட்டமிடல் கருத்தரங்கை ஆரம்பித்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார். செயலாளர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்த அனர்த்தங்களுக்கு முற்பட்ட காலத்திலே யாழ்.மாவட்டமானது கல்வியிலே முதன்மை இடத்தை வகித்தது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இன்று யுத்தம் காரணமாக அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டிருப்பதைப் போல கல்வியும் பின்தங்கி இருக்கிறது. இந்நிலையை மாற்றி நாம் மீண்டும் எழ வேண்டும் எனில் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். இங்கு எமது முதன்மை இலக்காக அடுத்த வருட க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவில் திறமை அடிப்படையில் முதல் இடத்தை பெற வேண்டும் என கொண்டு செயலாற்ற வேண்டும்.

### பின்னடைவுக்கான காரணிகள்

கல்வியில் பின்னடைவுக்கான காரணிகளில் இடப்பெயர்வு- படித்த மேல் மட்ட மக்களின் வெளியேற்றம் என்றாலும் அடுத்த மட்டத்திலுள்ளவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த கல்வித் துறையால் முடியும் எனச் சாதித்துக் காட்ட வேண்டும். அடுத்து கல்விக் கொள்கையானது தேசிய மட்டத்தில் வகுக்கப்படுவதால் எமது விஷேடத்துவம் கவனிக்கப்படு வதில்லை. விஷேட அணுகுமுறைகள் மறுக்கப்படுகிறது என்ற நிலை. இதனையும் எமது சூழலுக்கு ஏற்ற அணுகு முறைகளைக் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்து வதன் மூலம் வெற்றி கொள்ளப்பட முடியும்.

இன்று தமிழ் சிறப்புப் பட்டதாரிகள் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் தமிழ் கற்பிக்க முற்படுவதில்லை. உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் பெறுபேறு குறைவடைகிறது. கலைத்துறையில் உயர்பெறுபேறு கிடைக்கப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் இவற்றுக்கான தீர்வுகளைக் காண வேண்டியது கல்வித்துறை சார்ந்தவர்களின் பொறுப்பாகும்.

### ஆங்கில மொழி வளர்ச்சிக்கு இந்திய வளவாளர்கள்

ஆங்கில மொழித்திறன் தொடர்பான தேசிய மட்டத்தில் தமிழ் மாணவர்கள் உயர் அடைவைக் காட்டுகின்றனர். எனினும் எதிர்காலத்தில் ஆங்கில மொழித் திறன் விருத்திக்கான கல்வி அமைச்சின் ஒதுக்கீடுகள் குறையும் போது நாம் பின்தங்க வேண்டி ஏற்படும். ஆங்கில மொழி மூலக் கல்வியின் தரம் மிகவும் பின்தங்கியுள்ளது. அதனால் ஆங்கில மொழி வளவாளர்களை இந்தியாவில் இருந்து கொண்டுவந்து எங்களது ஆங்கில மொழிக் கல்வியை அபிவிருத்தி செய்யமுடியும்.

மூன்றாவதாக இலவசக்கல்வியின் நடைமுறைப் படுத்தல் வலய மட்ட வள அணியினர் சிறப்பாக செயற்படுத்துகின்றனரா? கல்விக்கான அரசின் ஒதுக்கீடு உச்ச பயன்படும் விதமாக பயன்படுத்தப் படுகிறா? இங்கு கண்காணிப்பு, மேற்பார்வை சரியான முறையில் மேற்கொள்ளப்படுகிறதா? எனும் விடயங்கள் மீளாய்வு செய்யவேண்டும். வலயமட்ட மேற்பார்வை, கண்காணிப்பை நவீன முகாமைத்துவ நுட்பங்களினூடாகவலுப்படுத்தவேண்டும்.

### தகவல் பரிமாற்றம் மோசமான நிலையில்

மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வலயக் கல்வி அலுவலகங்களிடையே தகவல் பரிமாற்றம் வினைத்திறனுடன் நடைபெற வேண்டும். ஒரு தகவலை கல்வி அமைச்சிலிருந்து கோரப்பட்டால் வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்து அவற்றைப் பெறுவதற்கு மாதக் கணக்கான கால அவகாசம் தேவைப்படுகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். கோட்டக்கல்வி அலுவலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள் தமது பிரதேச பாடசாலைகள் தொடர்பாக உடனடித் தகவல்கள் சேகரித்துக்கொள்ள வேண்டும். தகவல் பரிமாற்றம் விரைவுபடுத்தப்பட வேண்டும். இல்லையேல் காலதாமதமான தகவல் அதன் நம்பகத் தன்மையையும் இழந்துவிடுகிறது.

அடுத்து ஆசிரிய ஆளணி தொடர்பான பிரச்சினைகள். ஒருவர் பட்டதாரர் எனினும் ஆரம்பக் கல்வி நியமனம் பெறுவாராயின் அவர் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆளணியிலே கணக்கிடப்பட வேண்டும். அத்துடன் அவர் ஆரம்பக் கல்வியில் சேவையாற்றவும் வேண்டும். ஆரம்பக் கல்வி ஆசிரியர் பற்றாக்குறை தொடர்வதற்கு இவ்வாறான நிலை காரணங்களாகும். ஆசிரியர்களின் உளசுகவீனம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகவீனமான ஆசிரியர்கள் ஓய்வூதியத்திற்குரிய சேவைக்காலம் உடையவராயின் மருத்துவ பரிசோதனையடிப்படையில் ஓய்வுவழங்கநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

### மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி

யாழ்.மாவட்டத்தில் மாணவர் தொகை குறைந்து வருகின்ற நிலையில் போதிய ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களுக்கு கற்பித்தல்திறன் விருத்திக்கான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

பாடசாலையின் கட்டட வளங்களைப் பொறுத்த வரையில் புனரமைப்பு, அபிவிருத்தி என்ற இரண்டு வகையிலும் தெளிவாக வேறுபடுத்தப்பட்ட முன் மொழிவுகள் சமர்ப்பிக்க வேண்டும். அநேகமான புனரமைப்புக்கள் முடிவடைந்தாலும் இதுவரை மேற்கொள்ளப்படாத புனரமைப்பு வேலைகள் உரிய அனுமதிகளுடன் செயற்படுத்த முடியும்.

ஆசிரியர்களின் சம்பளம், சம்பள உயர்வு, லீவு, ஓய்வூதியம் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் இவ்விடத்தில் ஆசிரியர்களின் கவனம், ஈடுபாடும் செல்லாத வகையில் வலயக்கல்வி அலுவகங்கள் சிறப்பு முறையில் நிர்வாக கடமைகளை ஒழுங்கு செய்ய வேண்டும் அப்போது ஆசிரியர்கள் கல்வி, கலைத்திட்ட விருத்தியில் முழுக்கவனமும் செலுத்தி செயற்பட ஊக்கிவிக்க முடியும்.

### ஒதுக்கப்படும் நிதி செலவிடப்படுவதில்லை

பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குபோதுமான அளவு நிதி ஒதுக்கப்படுகிறது. இவ்வகையில் தர உள்ளீட்டுக்கான நிதி பெருமளவு பயன் படுத்தப்படாது சேமிப்பில் இருக்கிறது. இந்நிதி பெருமளவு மாணவர்களது கல்வியை ஊக்கிவிக்கும் வகையில் செலவு செய்யப்பட வேண்டும். வலயக்கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் என்பவற்றில் ஆண்டிறுதிக் கணக்கெடுப்பு பூரணப்படுத்தப்பட வேண்டும். பாடசாலைகளுக்கு பல்வேறு வழிகளிலும் கிடைக்கும் அன்பளிப்பு பொருள்களும் பதிவு செய்யப்பட்டு கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படவேண்டும். வலயக் கல்வி அலு வலகங்கள் நிதி தொடர்பான மாதாந்த அறிக்கைகளை நிர்வாகம் தொடர்பான மாதாந்த அறிக்கைகளை ஒழுங்காக அனுப்பவேண்டும். அதே போல் உரிய கணக்காய்வு அறிக்கை பெறப்பட்டு சிபார்சிகளுக்கேற்ப செயற்பாடுகள் மேற் கொள்ள வேண்டும். இவ் வகையில் வலயக்கல்வி அலுவலகங்களின் செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக்க நீங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதன் மூலம் நாம் எமது முதன்மை நிலையை மீண்டும் அடைவோம் என்றார்.

மாகாணக்கல்விச் செயலாளர், மேலதிக செயலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர்கள், திட்ட அலுவலர்கள் என்போரால் யாழ்.மாவட்டத்திற்கு ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த பணிப்பாளர்கள், கணக்காளர், விசேட கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள், ஆசிரிய நிலை முகாமையாளர் முகாமையாளர்களுக்கான இந்தச் செயலமர்வு தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன. இச் செயலமர்வுகள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தலைமையில் நடைபெறுகின்றன. (4-267)

# பொதுச் சுகாதார உதவியாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பு நேர்முகப்பரீட்சை 23ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன.20

பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் காலை 8மணி முதல் இடம்பெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் சி.சிவலிங்கம் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள 41 பேரின் விவரங்கள் வருமாறு:

நவரத்தினம் கஜீபன்- கோண்டாவில் வடக்கு, வசந்தகுமார் அபராஜ்- கொக்குவில்மேற்கு, சிவஞானம் விஜிதரன்- ஏழாலை மேற்கு, தில்லைநாதன் ரஜிந்தன்- உரும்பிராய் மேற்கு, கந்தசாமி கார்த்திகேயன்- திருநெல்வேலி கிழக்கு, சிவப்பிரகாசம் பிரணவன்- கொழும்புத்துறை, அரசரட்ணம் பிரகாஸ்- உடுவில் கிழக்கு, செல்வராசா கோபிநாத்- மானிப்பாய் வடக்கு, ஜேசப் கிறிசான் அஞ்சலோராஜ்-இல.27, நல்லூர், தங்கராசா நிரூசன்- அரியாலை, தனபாலர் சந்திரசேகர்- நல்லூர் கிழக்கு, சிறி நீலமேகநாதன் பார்த்தீபன்- கோப்பாய் வடக்கு, அந்தோனிப்பிள்ளை அமலதாஸ்- கொழும்புத்துறை, தில்லைநாதன் அருட்செல்வன்- நாவற்காடு , தவராசா சரண்ராஜ்- காரைநகர், லோகேஸ்வரன் செந்தூரன்- சுதுமலை தெற்கு, ஜெகநாதன் சேந்தன்- புத்தூர் மேற்கு, சின்னையா கோபினாத்- அரியாலை, பவானந்தன் சிந்துஜன்- வண்ணார்பண்ணை, தேவேந்திரன் கருணாகரன்- திருநெல்வேலி, விபுலானந்தராஜா உமாசுதன்- இணுவில் மேற்கு, விக்னராஜா கிருபன்- மானிப்பாய் மேற்கு, யோகரத்தினம் இராமேஸவரன்- துன்னாலை வடக்கு, கனகரத்தினம் கிரிதரன்- கல்வியங்காடு, அருளம்பலம் தஜீகரன்- நல்லூர், இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா- அளவெட்டி வடக்கு, பசுவன் விஜயகுமாரன்-கைதடி தெற்கு, செல்வநாதன் சர்வானந்தன்- அரியாலை மேற்கு, சந்திரசேகரம் முகுந்தன்- உடுவில் தெற்கு, செல்வராசா செல்வபரன்- அளவெட்டி தெற்கு, கந்தசாமி சுதர்சன்- ஆனைக்கோட்டை, ஜெயசீலன் கினோயூட்றாஜ்- வவுனியா, செல்வநாயகம் சிவசங்கர், பம்பலப் பிட்டி, குமாரசாமி குமாரதாசன்- தும்பளை, வேலாயுதன் ஜெயக்காந்தன்- தொல்புரம் மேற்கு, பரமநாதன் றமேஸ்- நாவற்காடு, ரட்ணவேலு செந்தூரன்- நல்லூர், சண்முகநாதன் மயூரன்- சண்டிலிப்பாய், நாகலிங்கம் சுப்பிரமணியம்- பருத்தித்துறை, மணிரத்தினம் சுதாகரன்- கரணவாய் கிழக்கு, இராஜேஸ்வரன் இந்திரஜித்- இணுவில் தெற்கு,

# வன்னி மக்கள் குறித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதர்கள் மற்றும் இராஜதந்திரிகள், தூதரக அதிகாரிகளை கொழும்புக்கு அழைத்துப் பேசினார் ஜனாதிபதி. அவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

வன்னியிலுள்ள தமிழ் மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள கஷ்டங்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்பதையும், ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டவே அரசு இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கின்றது என்பதையும் உலக நாடுகளுக்குத் தெரிவிக்குமாறும் அவர் இலங்கையின் இராஜதந்திரிகளைக் கேட்டுள்ளார்.

இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2005 இல் நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட வேளை, நாட்டின் சகல பகுதிகளிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை முன் வைத்தேன்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக இல்லாத போதிலும் - அவர்களுடைய அடிப்படைத் தந்திரோபாயங்கள் தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத போதிலும் - நான் அவர்களுடன் பேச்சுகளை மேற்கொள்ள இணங்கினேன்.

### நேர்மையான முயற்சியை புலிகள் நிராகரித்தனர்

எனினும் எனது நேர்மையான முயற்சிகள் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டன. அவர்கள் தீவிரமான வன்முறை மற்றும் பயங்கரவாதம் மூலமே பதிலளித்தார்கள்.

அவ்வேளை நடைமுறையிலிருந்த யுத்தநிறுத்தத்தின் ஒவ்வொரு பகுதியையும் அவர்கள் மீறினார்கள்.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்ற வகையில் நான் எனது மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியிருக்க வில்லை.

பயங்கரவா[illegible] பகுதிகளில் [illegible]கைதிகளாக வை[illegible]கப்பட்டுள்ள மக்களை மீட்பதற்கு பாதுகாப்புப் படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன.

### குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள வேண்டும்

எமது பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்ளவில்லை. மனிதாபிமானப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களை விடுவித்து சமாதானம், சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றை ஏற்படுத்துவதே அவர்களது பணியின் நோக்கம்.

வடபகுதியில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் ஏற்படுத்துவதில் அரசு அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து உலகிற்கு அறிவிக்க வேண்டிய தருணம் இது.

அங்குள்ள அப்பாவி மக்களின் நிலை குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள வேண்டிய தருணமிது.

வடபகுதியில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் துயரங்கள் தங்களை விடுதலைப் போராளிகள் எனப் பிழையாகக் கூறிக்கொள்ளும் விடுதலைப்புலிகளால் ஏற்படுத்தப்பட்டவை என்பதைத் தெரிவிக்க வேண்டியது உங்களது விசேட பணியாகும்.

பயங்கரவாதிகளின் தலைவர்களைப் பாதுகாப்பதற்கான மனித கேடயங்களாகவே இந்த மக்கள் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் என்பதை உங்கள் நாடுகளில் உள்ள மக்கள் அறிய வேண்டும்.

இலங்கையின் வடபகுதி புதிய சுதந்திரத்தின் உதயத்திற்காகக் காத்திருக்கின்றது என்பதையும் உலகம் உங்கள் மூலமாக அறியவேண்டும்.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வதிலும் பொதுமக்களுக்கு எவ்வித உயிரிழப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதிலும் எமது பாதுகாப்புப் படையினர் போல வேறு எவரும் வெற்றிகரமாக செயற்பட்டதில்லை.

நாங்கள் குறிப்பிட்ட இனத்திற்கு எதிராகப் போராடவில்லை. மாறாகப் பயங்கரவாதத்தை முன்னெடுக்கும் குழுவிற்கு எதிராகவே போராடுகின்றோம் என்பதை உலகிற்குத் தெரிவிக்க வேண்டிய தருணமிது - என்று ஜனாதிபதி மேலும் கூறினார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ரி.வி. கலையகம் மீதான தாக்குதல் விசாரணையை திசை திருப்ப முயற்சி?

## பொலிஸார் மீது நீதிமன்றம் காட்டம்

கொழும்பு, ஜனவரி, 20

எம்.ரி.வியின் தெபானம கலையகம் மீதான தாக்குதல் தொடர்பான புலன் விசாரணைகளை திசைத்திருப்ப பொலிஸார் முயலுகின்றனர் என்ற சாரப்பட பொலிஸாரைக் கொழும்பு, நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் நேற்றுக் கடிந்து கொண்டது.

நீதிவான் வசந்த ஜினதாஸ முன்னிலையில் இந்த விடயம் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அச்சமயம், இவ்விடயத்தை ஒட்டி பொலிஸாரால் சந்தேக நபர்கள் என முன்னிறுத்தப்பட்ட ஐவரையும் சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இந்த வழக்கின் புலன் விசாரணைகளைத் திசைத்திருப்பும் நோக்கில் பொலிஸார் செயற்படுகின்றனரா என்ற கேள்வியை எழுப்பிய நீதிவான், தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெரும்கவனத்தை ஈர்த் திருக்கும் இச்சம்பவம் தொடர்பான புலன் விசாரணை குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் (சி.ஐ.டியிடம்) ஒப்படைக்கப்படாதமை ஏன் என்றும் கேள்வி எழுப்பினார். (அ-சி)

## கிளிநொச்சி மாவட்ட மக்கள் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்வு

வன்னிப்பகுதியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் குறுகியதொரு பிரதேசத்தில் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அரச செயலகம் உட்பட பிரதேச செயலகங்கள் அனைத்தும் இடம்பெயர்வு காரணமாக செயலிழந்துள்ளன. கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை, இடம்பெயர்ந்த மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையுடனும் இணைந்து செயற்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை - இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் குறித்து தனது கட்சியினருக்கு எழுதிய பகிரங்க மடல் ஒன்றிலேயே கருணாநிதி இப்படித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறும்:-

'சிங்கள இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் போர்' என்ற போர்வையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுகின்றனர்.

இந்திய வெளியுறவுச் செயலர் கொழும்பு சென்று இந்திய திரும்பியும் இலங்கையில் போர் நிறுத்தம் குறித்து அறிவிக்கப்படவில்லை. இதுதவிர இந்திய வெளியுறவுத்துறைத் அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை சென்று வருவதற்கு இயலாத காரணம் எதுவும் இருந்தாலும், அதனையும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கலாம்.

ஜெயவர்த்தனா - ராஜீவ் காந்தி உடன்பாடு பற்றி பேசி முடிக்கிற வரை போர் நிறுத்த முயற்சியை மேற்கொள்வது பெரிய தவறு ஒன்றும் இல்லை.

அதேநேரம் இங்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையை தேர்தல் அரசியலாக சில அரசியல் கட்சிகள் மாற்றம் கொண்டிருக்கின்றன - என்றார். (அ-சி)

## கணிதபாடத்துக்கான அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜன.20

ஜீ.சி.ஈ சாதாரண புதிய பாடத்திட்டத்தில் கணித பாடத்துக்கான மீள் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த பரீட்சை அனுமதி அட்டைகள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகளை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் அந்தந்தக் கல்வி வலயங்களில் அதிபர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## வவுனியா - வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் சனிக்கிழமை பாதை திறக்கப்படாமையினால் அவை இன்னமும் திரும்பிவரவில்லை. பாதை திறப்பதற்கு இன்னும் ஓரிரு தினங்கள் செல்லும் எனவும் கூறப்படுகிறது. (சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தினை முடித்து வைத்து இராமதாஸ் ஆற்றிய உரையின்போதே தமது போராட்டம் தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக திருமாவளவன் மற்றும் அரசியல் கட்சிகளுடன் பேசி, அடுத்த கட்டப் போராட்டம் தொடர்பாக நல்ல முடிவை எடுப்போம். அடுத்த கட்டப்போராட்டம் என்பது ஒரு வாரம் அல்லது 10 நாள்கள் நடக்கவேண்டும்.

இந்தப் போராட்டத்தால் தமிழகமே செயலிழக்க வேண்டும். பேருந்து, தொடருந்து எதுவும் ஓடக்கூடாது. மருந்து, பால் விநியோகம் மட்டுமே நடக்கவேண்டும். இந்தப் போராட்டம் உலகையே உலுக்க வேண்டும். இதைப் பார்த்துவிட்டு, இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும்.

இது எனது தனிப்பட்ட முடிவு. திருமாவளவனுக்குக் கூட நான் இப்படி ஒரு போராட்டத்தைக் கூறுவேன் என்பது தெரியாது. இதைவிட வேறுவிதமான நல்ல போராட்டத்தை முதலமைச்சர் கூறினால், இதனை விட்டுவிட்டு, முதல்வர் கூறும்படி போராட்டம் நடத்தலாம். முதல்வரை முன்நிறுத்தி, அவரது வழி காட்டுதலின்பேரில் ஒரு நல்ல போராட்ட முடிவை எடுக்கவேண்டும்.

தமிழன் என்றால், மத்திய அரசு கிள்ளுக் கீரையாக நினைக்கிறது. விடுதலைச் சிறுத்தைகளும், பாட்டாளி மக்கள் கட்சியும் இல்லை என்றால், தமிழ் நாட்டில் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் சமாதிகட்டி இருப்பார்கள். இந்த கருத்துக்கு மறுப்பு யாராவது தெரிவித்தால், அவர்கள் சென்னையில் மேடை போட்டு சொல்லட்டும். அதில் நானும், திருமாவளவனும் பேசுவோம் -என்றார்.

# மொனறாகலைக் காட்டில் துப்பாக்கிச்சூடு இருவர் உயிரிழந்தனர்; மூவர் காயம்

கொழும்பு, ஜன. 20

மொனறாகலை, புத்தள, மாளிகாவிலப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தோர் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தினர் என்று பாதுகாப்புத் தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமது கால்நடைகளின் உணவிற்காக அருகில் உள்ள காட்டுப்பகுதிக்குச் சென்ற 12 பேர் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

அத் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். ஐந்து பேர் அங்கிருந்து தப்பியோடி நேற்றுப் பிற்பகல் வந்து சேர்ந்தனர். காயமடைந்த மூவர் மொனராகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலும் நால்வர் காணாமற் போயுள்ளனர் என்றும் - படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது உயிரிழந்த இருவரதும் சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## அநுராதபுரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் இனந்தெரியாத சிலர் மேற்படி இரு ஆண்களையும் அந்தப் பகுதிக்கு கொண்டு வந்து அங்கு வைத்து இருவரையும் எரியூட்டிக் கொலை செய்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற அநுராதபுர மாவட்ட நீதிவான் விசாரணைகளை நடத்திவிட்டுச் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக அநுராதபுர வைத்திய சாலையில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-சி)

## தமிழ் கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் தாக்கப்பட்டார் எனவும் தங்களுடைய உடைமைகள் மற்றும் வழங்கப்பட்ட அடையாள அட்டை என்பன பறித்து எறியப் பட்டன எனவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் அனுராதபுர சிறைச்சாலையின் காவலராகக் கடமைபுரிந்து வரும் பாலேந்திரா, சுமக கங்கீத் மற்றும் அனுராதபுர சிறைச் சாலை அதிகாரிகளும் அடங்குவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி ஏ. ஜூட்சன் இதற்குச் சாட்சி அளிக்குமாறு தெரிவித்தார். 07 கைதிகள் சாட்சியமளித்தனர். இதனைப் பதிவு செய்த மாவட்ட நீதிபதி, பொலிஸ்மா அதிபர், அனுராதபுர பொலிஸ் அதிகாரி, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு, உடனடியாக விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி அன்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.

தாம் மற்றைய கைதிகளிடமே உடைகளை வாங்கி அணிந்து நீதிமன்றத்திற்கு வந்தனர் எனவும் கைதிகள் தெரிவித்தனர்

## பராக் ஒபாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வைக் காண்பதற்காக வருகை தர உள்ள மக்களின் எண்ணிக்கையை தம்மால் சரியாக மதிப்பிட முடியாமலுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க பேருந்து சங்கம் 10 ஆயிரம் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளது.

வாஷிங்ரனில் ஒபாமாவின் பதவியேற்பு நிகழ்வை மக்கள் பார்ப்பதற்கு வசதியாகப் பல இடங்களில் பாரிய திரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பராக் ஒபாமா பதவியேற்கும் நிகழ்வை ஆசனங்களில் அமர்ந்தபடி பார்வையிடுவதற்காக மாத்திரம் பல லட்சம் மக்கள் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

சர்வதேச தலைவர்கள் உட்பட வெளி நாட்டுப் பிரமுகர்கள் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பராக் ஒபாமாவின் பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டு வாஷிங்ரனில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

20ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் புலனாய்வு அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-சி)

## யாழ்.- கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்துள்ள அமைச்சர், ஏ- 9 பாதை புனரமைப்புப் பணிகள் முடியும் வரை தாம் காத்திருப்பதாகவும்-

இதேவேளை, வவுனியா - யாழ். பயணிகள் போக்குவரத்துச் சேவை மேலும் பலப்படுத்தப்படும் என்றும் அதற்காக மேலதிக பஸ்கள் ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் சொன்னார்.

ஏ- 9 நெடுஞ்சாலையில் கண்ணி வெடிகள் அதிகம் புதைக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றை அகற்றி முடிந்ததும் அப்பாதை பயணிகளின் பாவனைக்கு விடப்படும் என்றும் அரசு அண்மையில் தெரிவித்திருந்தது. (அ-சி)

## சுதந்திரபுரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து வருகின்ற சுதந்திரபுரம், தேவிபுரம், உடையார்கட்டுப் பகுதிகளை நோக்கி நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் தேவிபுரத்தில் 2 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இலக்கம் 7 பழைய கொலனி, மாங்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வாழ்ந்து வந்த வே.கிருபாகரன் (வயது 40), மட்டுவிலில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்த நந்தகுமார் (வயது 30) ஆகியோரே உயிரிழந்தனர்.

க.சந்திரசேகரன் (வயது 38), அ.சரஸ்வதி (வயது 59), வேகானந்தன் (வயது 35) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

சுதந்திரபுரத்தில் நடத்தப்பட்ட ஷெல்த் தாக்குதலில் சுடரவன் (வயது 04), கனிமொழி (வயது 08), சிந்துஜா (வயது 07),இ.துரைராசா (வயது 75),மா.சிவகாமி (வயது 55), பொன்னம்பலம் (வயது 74) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

உடையார்கட்டுப் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் செல்வறஞ்சனி (வயது 21) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

சுதந்திரபுரம் பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணிக்கும் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதேவேளை, விசுவமடுப் பகுதியில் படையினரின் ஷெல்த் தாக்குதல்களால் கொல்லப்பட்ட 3 பொதுமக்களின் சடலங்கள் விசுவமடுவில் உள்ள கிளிநொச்சி பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.கிளிநொச்சி, ஆனந்தபுரத்தைச் சேர்ந்த சிறீ பத்மாநாதன் சுபாகரன், இலக்கம் 64 டி10, உருத்திரபுரத்தைச் சேர்ந்த அருணாசலம் கணபதிப்பிள்ளை (வயது 72)ஆகியோரின் சடலங்களுடன் 60 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரின் சடலமும் அங்கு வைக்கப்பட்டுள்ளது - என்று கூறப்பட்டுள்ளது.


## இதோ உங்களுக்காக...!

**PRINTER**
Color Printer (inkjet) - 5,300/=
Samsung laserjet - 13,250/=
Hp laserjet - 13,750/=
Color laserjet (4 Toner) - 35,000/=
Hp Color laserjet 2600N - 53,000/=
3in1 Laserjer miniphotocopy - 37,500/=
4in1 laserjet - 38,500/=
(Fax ,Photocopy scanner printer)

**LCD MONITOR**
LCD Monitor 15.6" - 13,900/=
LCD Monitor 17" - 17,500/=
Multimedia LCD 19" - 21,000/=
Multimedia LCD 22" - 32,000/=

**CRT MONITOR**
LG 15" - 12,250/=
Viewsonic 17" - 16,250/=

**DVD WRITER**
Samsung 22x sata - 3,400/=
LG sata - 3,400/=
Sony 22x sata - 3,900/=
Asus 20x Lightscribe -4,000/=

**MOTHER BOARD**
Biostar LGA - 5,900/=
Foxconn LGA - 6,000/=
Asus LGA - 6,100/=
Intel LGA - 8,250/=
MSI DDR1 LGA - 5,500/=
Longtron 478 DDR1-6,400/=
Biostar 478 DDR11 - 6,750/=

**VGA CARD**
Agp 128MB - 4,100/=
Agp 256MB - 5,600/=
Pci Express 512MB - 5,900/=
Gforce 512MB Pci Express - 8,500/=
Geforce 1GB PciExpress - 12,250/=
Asus ATI 512MB PciExpress - 9,700/=

**PROCESSOR**
Intel 1.8Ghz celeron - 5,200/=
Intel 1.8Ghz Dualcore - 7,900/=
Intel 2.0Ghz Dualcore - 8,700/=
Intel 2.2Ghz Dualcore - 8,900/=
Intel 2.53Ghz Core2duo - 14,750/=
Intel 2.66Ghz Core2duo - 14,900/=

**ACCESSORIES**
Tv Tuner - 3,000/=
Combo box - 3,500/=
Recovery card - 1,800/=
Web Camera - 1,800/=
Ball Mouse - 400/=
Optical Mouse - 500/=
USB Capture card - 8,500/=
Bluetooth - 900/=
DVD player with USB -7,400/=
Refill ink - 1,100/=

**RAM**
Kingston 512MB DDR11 -1,250/=
Kingston 1GB DDR11 - 1,700/=
Kingston 2GB DDR11 - 3,400/=
Kingston 512MB DDR1 - 2,600/=
Kingston 1GB DDR1 - 4,700/=

**HARD DISK**
40GB sata - 4,500/= 160GB sata - 5,400/= 320GB sata - 8,500/=
80GB sata - 4,900/= 250GB sata - 6,250/= 500GB sata - 9,900/=
250GB Portable Harddisk - 11,750/=

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 8554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

இப்போது யாழில்......
ம.கொழும்பு பிறிண்டர்
சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும் யாழில் இருந்தவாறே.
எமது யாழ் கிளை 666, கே.கே.எஸ் வீதி, (யாழ். இந்துக் கல்லூரி அருகாமை) ஊடாக கொழும்பு விலையில் யாழில் செய்திடலாம்.
ஏழையின் கல்வி வளர்ச்சிக்கு ஒளி ஏற்றும் நிறுவனம்.

A/L DAY CLASS
பௌதிகவியல்
N.Babu
ஆரம்பம்:- 21.01.2009
Wed 6.45am
(Wed, Fri- 6.45-7.45)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.

கற்சுமி வெளியீடு
கற்சுமி வெளியீடுகளை புதிதாகப் பெற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்க. பெற்றோர்/ மாணவர்கள் பதிவு செய்யுங்கள்.
☎ 222 7442


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org